## அத்தியாயம் 1

# ஆதியிலே

***பலவித ஆதிகள்–முன்னிருந்த பூமி –அதை ஒழுங்குபடுத்தும் ஒரு சிருஷ்டிப்பின் வாரம்–யுக நாளின் கால அளவு–விஞ்ஞானிகளின் அனுமானங்கள் பொருத்தமில்லாதது என பேராசிரியர் தானாவின் ஒப்புதல்–பல வகையான இனங்களின் மாறாத்தன்மை பரிணாமக் கொள்கையை தவறு என நிரூபிக்கிறது– டார்வினின் புறாக்கள்– பிரபஞ்ச தோற்றத்தின் ஒரு கோட்பாடு–பேராசிரியர் சில்லிமேன் மற்றும் தானாவின் உண்மையுள்ள சாட்சியங்கள்– முதலாவது சிருஷ்டிப்பின் யுக நாள்– இரண்டாவது....நாள் – மூன்றாவது.... நாள் – நான்காவது....நாள் – ஐந்தாவது....நாள் – ஆறாவது.... நாள் – ஏழாவது யுக நாளின் விடியலில் மனிதன், பூமியின் ராஜா சிருஷ்டிக்கப்பட்டான்– சர்.ஜே.டபிள்யு.டாசன், எல்.எல்.டி., எப்.ஆர்.எஸ். அவர்களின் ‘‘புவியியலும் சரித்திரமும் சந்திக்கும் இடம்’’ என்ற நூலின் சாராம்சம்–சிருஷ்டிப்பின் வாரத்தின் ஏழாவது யுக நாள்–அதன் காலஅளவு– அதன் நோக்கமும் பலனும் – வானத்துக்குரிய, பூமிக்குரிய பெரிய யூபிலி, அதன் நிறைவின் காலம்.***

யேகோவா தேவனின் சிருஷ்டிப்பிலே ஒருவரோடொருவர் சம்பந்தங் கொண்ட தூதர்கள் அநேகர், எண்ணிலடங்காதவர்கள் உண்டு. ஆனால் அவர்களுக்குப் பின்னால் அவரது சொந்த சிருஷ்டிப்பின் ஞானமும் வல்லமையும் இருக்கின்றன. அவர் மாத்திரமே சிருஷ்டிகர். வேதம் உறுதிப்படுத்துகிறபடி ‘‘அவருடைய கிரியைகளெல்லாம் பூரணமாயிருக்கிறது.’’ அவருடைய பூரண கிரியைகளை தவறான முறையில் பயன்படுத்தவும், மாற்றவும் பொல்லாத தேவ தூதர்களையும் பொல்லாத மனிதர்களையும் அவர் அனுமதிக்கலாம். ஆனால் தீமை சிருஷ்டிகளை கெடுக்கவோ, அழிக்கவோ தொடர்ந்து நீண்ட காலத்திற்கு அனுமதிக்கப்படமாட்டாதென்று அவர் நமக்கு உத்திரவாதமாக

சொல்கிறார். அவர் கடைசியில் தீமையை தடைப்படுத்தி அழிக்கும் போது, அதை அவர் தமது சிருஷ்டிகளை சோதிக்கவும், சுத்திகரிக்கவும், நிரூபிக்கவும், பொலிவூட்டவும் மாத்திரமல்ல அவருடைய பரிசுத்தம், இரக்க குணம், மற்றும் திட்டத்தை அவருடைய ஞானமுள்ள சிருஷ்டிகளின் பார்வையில் மிக பிரகாசமுள்ளதாக்கவும் அதை அனுமதித்ததின் காரணம் என்பதை நாம் புரிந்து கொள்வோம்.

ஆதியாகமத்தில் ''ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்'' என்று வாசிக்கும்போது, இந்த ஆதி பிரபஞ்சத்தை குறிக்காமல் நமது பூமியை மட்டுமே குறிக்கிறது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தேவன் பூமியை அஸ்திபாரப்படுத்தி, ''மேகத்தை சமுத்திரத்திற்கு வஸ்திரமாகவும், இருளை அதற்குப் புடவையாகவும் உடுத்தின போது,'' ''விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி, தேவ புத்திரர் எல்லோரும் கெம்பீரித்தார்களே.'' (யோபு 38: 4–11) ஆனாலும் இதைவிட முந்திய ஆதியைக் குறித்து வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது தேவபுத்திரர் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னான ஒரு ஆதி; நாம் வாசிக்கும் வண்ணமாக : ''ஆதியிலே வார்த்தை (லோகாஸ்) இருந்தது, அந்த லோகாஸ் தேவனிடத்திலிருந்தது, அந்த லோகாஸ் ஒரு தேவனாயிருந்தது; அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.'' (யோவான் 1:1–3) (தொகுதி 5ல், 3வது அத்தியாயத்தைப் பார்க்கவும்). யேகோவா தேவன் அநாதியாய் இருக்கிறபடியால் அவருக்கு ஆரம்பமே இல்லை.''ஒரே பேரானவரே'' எல்லா ஜீவிகளுக்கும் மேலானவர்; ''தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர்''– ''சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்'' (வெளி. 3:14; கொலோ. 1:15). தேவ தூதகணங்களின் சிருஷ்டிப்பின் ஆதிகள் அதன்பின் வரிசையாக வருகின்றன; இந்த ஆதிகள் பூமியின் சிருஷ்டிப்புக்கு முன்னதாக இருந்திருக்க வேண்டும்; அப்பொழுது தான் தேவ தூத கணங்கள் பூமி சிருஷ்டிக்கப்படும்போது கெம்பீரித்திருக்க முடியும்.

ஆதியாகமத்தில் சொல்லப்பட்டவைகளை தீர்க்கமாக பரிசோதித்துப் பார்க்கும் போது, வானமும் பூமியும் சிருஷ்டிக்கப் பட்டதற்கும் (வசனம் 1), அதைத் தொடர்ந்து ஒழுங்குப்படுத்தப் பட்டதற்கும் அல்லது, இவைகள் முறைப் படுத்தப்பட்டதற்கும், தாவரம், மிருக ஜீவன்கள் சிருஷ்டிக்கப் பட்டதற்கும் இடையே வேறுபாடு இருப்பதை நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது. இந்த தொடர் முறை செயல்கள் தேவனுடைய ஆறு யுக நாட்களின் தெய்வீக வேலை என்று வருணிக்கப்படுகிறது. வசனம் 2 சொல்கிறது : சிருஷ்டிப்பின் வாரத்தின் முதல் நாளின் துவக்கத்தில் பூமியானது ஒழுங்கின்மையும் (முறை யில்லாமல்) வெறுமையுமாய் (ஒன்றுமில்லாமல்), பிரயோஜனமற்றதாக, வெற்றிடமாக, இருளாக **இருந்தது.** இந்த முக்கியமான விஷயம் தனிப்பட்ட முறையில் கவனிக்கப்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளப் படுமாயின், உடனடியாக, அது இதுவரையிலிருந்த பூமியின் அமைப்பியலின் அத்தாட்சியை பலப்படுத்தும் சாட்சியாயிருக்கும். ஆனாலும் புவியியல் வல்லுநரின் கோட்பாடுகளில் சில காரியங்களை எதிர்க்க நாம் கடமைப்பட்டுள்ளோம். வேதாகமத்தினிமித்தம் வற்புறுத்திக்கூற தேவையற்ற காரியங்களை அகற்றி விட்டு ஏற்றுக் கொள்ள வேண்டியவைகளை உடனடியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த **ஆதிக்கும்** தேவன் பூமியை மனித குடியிருப்புக்கு தகுதியுள்ளதாக மாற்றும் சிருஷ்டிப்பின் வாரத்தின் **ஆதிக்கும்** இடைப்பட்ட காலம் எவ்வளவு என்பதை வேதம் கூறவில்லை. இந்த இடைவெளி எவ்வளவு என்பதில் புவியியல் வல்லுநர்களுக்குள்ளே ஒத்த கருத்து இல்லை– ஒரு சில தீவிர வல்லுநர்கள் அது லட்சக்கணக்கான வருஷங்கள் இருக்கலாம் என்று தீவிர சிந்தனையுடன் தங்கள் இஷ்டப்படி சொல்கிறார்கள்.

மீண்டும் சிருஷ்டிப்பின் காலத்திற்கு வரும்போது – நமது வானத்திலும் பூமியிலும் மனிதனின் நித்திய வாசஸ்தலத்திற்காக தேவனின் பரதீசை ஆயத்தப்படுத்தும் காரியங்களின் ஒழுங்குகளை நாம் பார்க்கும்போது இந்த ''நாட்கள்'' இருபத்து நான்கு மணி நேரங்கொண்டது என்று எந்த ஒரு இடத்திலும் அறிவிக்கப்படவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். ஆகவே நாமும் அவைகளை அவ்விதமாக குறைத்து எண்ண வேண்டியதில்லை. வேதாகமத்தில் **'நாள்'** என்ற வார்த்தை ஒரு யுகம் (சகாப்தம்) அல்லது ஒரு காலப்பகுதியை குறிக்கிறது. இருபத்து நான்கு மணி நேரங் கொண்ட நாளை குறிப்புகளில் **அதிகமாக** பயன்படுத்தினாலும் எல்லா இடத்திலும் அது பயனற்றது. ஏனெனில் சில குறிப்புகள் ''வனாந்தரத்தில் சோதனை நாள்'' என்பது ''நாற்பது வருஷம்'' என்றும் சில சமயம் ''ஒரு நாள்''

என்பது ''ஒரு வருஷம்'' என்றும் தெரிவிக்கின்றன. **(சங். 95:8–10 ; எண். 14:33,34 ; எசே. 4:4–6)** மேலும் ''கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும்'' என்று அப்போஸ்தலர் கூறுகிறார். **(2பேது.3:8)** நிச்சயமாக இந்த ''யுக–நாட்களெல்லாம்'' சூரிய நாட்களல்ல. ஏனெனில் நான்காவது நாள்–நான்காவது யுகம் வரை சூரியன் காணப்படவில்லை.

இந்த ''யுக–நாட்களின்'' கால அளவு சொல்லப்படா விட்டாலும், அவைகள் ஒரே அளவான காலப்பகுதி என நாம் நியாயமாக யூகிப்பது சரி என்று வாசகர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம். ஏனெனில் அவைகள் எல்லாம் ஒரு சிருஷ்டிப்பின் வாரத்தில் உள்ள (சமமான) நாட்கள் ஆகும். ஆகவே இந்த ஒரு நாளின் கால அளவு குறித்து தகுதியான ஆதாரம் கிடைக்கும் பட்சத்தில் நாம் மற்றவைகளும் இதே மாதிரியான கால அளவை கொண்டதாக இருந்தன என்று யூகிப்பது நியாயமானதாகும். இந்த சிருஷ்டிப்பின் நாட்களில் ஒரு நாள் என்பது ஏழாயிர வருஷ கால அளவு என்றும், அப்படியெனில் மொத்த சிருஷ்டிப்பின் வாரம் என்பது 7000 X 7 = 49000 வருஷங்கள் என்பதற்கு திருப்தியான ஆதாரத்தை காண்கிறோம். சில புவியியல் வல்லுநரின் யூகப்படி ஒப்பிடும்போது இந்த காலம் மிகச் சிறிய அளவாக இருந்தாலும், அங்கே குறிப்பிடப்பட்ட வேலைகள் முடிவதற்கு போதுமானதாக இருந்தது என்று நம்புகிறோம் –கட்டளை பிறப்பித்தல், பூமியை நிரப்புதல் –ஏற்கனவே பூமி இருந்தது; ஆனால் '' ஒழுங்கின்மையும் (முறையில்லாமல்) வெறுமையுமாய் (ஒன்றுமில்லாமல்) இருந்தது.''

விஞ்ஞானிகளுடைய அனுமானத்திற்கு காரணமாயிருந்த புள்ளிவிபரங்களைக் குறித்தும், அதை கணித்த முறை குறித்தும் பேராசிரியர் தானா ( Prof. DANA) கூறுகிறதாவது:–

''தொடர்ந்து படியும் வண்டல் மண்ணின் தடிமனை கணக்கிட்டு அதன்மூலம் கடந்து சென்ற காலத்தை கணக்கிடும் முறையில் வண்டலின் இந்த தடிமனில் எப்போதும் சந்தேகமே எழும்புகிறது. தண்ணீரிலிருந்து சேகரிக்கப்பட்ட வண்டல் மண்ணின் படிவ கணக்கை வைத்து, ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் உதாரணமாக கடந்த 2000 வருட காலத்தில் வந்து குவிந்த மண்ணின் தடிப்புத் தன்மையை சார்ந்து புள்ளி விபரங்களை கணக்கிடும்போது இதனால் ஏற்படுகிற சந்தேகம் ஆரம்ப நாளிலிருந்து எடுக்கப்பட்ட கணக்கைப் பாதிக்கிறது– இது கிட்டத்தட்ட உபயோக மற்றதாக இருக்கிறது..... மதிப்பீடு...... ஒரு தண்ணீர் ஓடை ஒதுக்குகின்ற மென்மையான மண்ணை சார்ந்திருக்கும்போது அதிக



மதிப்புள்ளதாயிருக்கிறது; என்றபோதிலும் இங்கேயும் பெரிய சந்தேகத்திற்கு இடமிருக்கிறது.''

இந்த விஷயத்தை வேதாகமத்தின் அடிப்படையில், அது தேவனால் வெளிப்படுத்தப்பட்ட ஒன்று என்று நம்பி சோதித்துப் பார்ப்போம். வேதாகமத்தின் கூற்றுக்கும் புவியியல் வல்லுநர்களின் யூகத்திற்கும் முரண்பாடு எதுவும் காணப்பட்டால், தவறுகள் புவியியல் வல்லுநர்களுடையது; ஏனென்றால் அவர்களுடைய தத்துவங்கள் நன்றாக ஆராயப்பட்ட விஞ்ஞான அடிப்படையிலோ அல்லது விஞ்ஞான வளர்ச்சியிலோ அமையவில்லை.

மேலும், ஆதியாகமத்தை எழுதியவர், தான் குறிப்பிட்டுள்ள நாட்களின் கால அளவு, அவைகளின் துல்லியமான விடைகள் எல்லாவற்றையும் அறிந்திருந்தார் என்று எண்ண தேவையில்லை. நாங்கள், ஆதியாகமத்தின் குறிப்புகளை வேதத்திலுள்ள பெரிய தெய்வீக வெளிப்படுத்துதலின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளுகிறோம். அதின் சில வாக்கியங்களுக்குள் உள்ள மேலான அறிக்கைகளை வியக்கும் வகையில் மிக துல்லியமாக செய்யப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிகளும் ஒப்புக்கொள்வதைக் காண்கிறோம். மாறாக, புறஜாதியாரின் சமய புத்தகங்கள் ஒன்றிலும் இந்த பொருள் பற்றி காணப்படவில்லை; ஆனால் இதைப் பற்றி அபத்தமான அறிக்கைகள் உள்ளன.

''ஆதியிலே தேவன் .....சிருஷ்டித்தார்'' என்று துவக்குகின்ற வெளிப்படுத்துதலின் அறிவிப்பு எளிமையின் மேன்மையான தோற்றமாக காணப்படுகின்றது. நான் எப்பொழுது வந்தேன், யாருக்கு நான் பொறுப்பாளியாக இருக்கிறேன் என்று ஆர்வமுடன் கேட்கப்படும் முதல் கேள்விக்கு அது விடை தருகிறது. இந்த பிரகாசமான நாளிலே சில பிரகாசமான உள்ளங்கள் ஞானமுள்ள சிருஷ்டிகரைப் பற்றிய சிந்தனையிலிருந்து திரும்பி பரிணாமக் கொள்கையின் கீழ் கிரியை செய்கிற ஒரு குருட்டு நம்பிக்கையை அங்கீகரிப்பதும் திடகாத்திரம் உள்ளவர்கள் மட்டும் வாழமுடியும் என்பதும் துரதிருஷ்டவசமானது. ஐயோ! பரிதாபம், இந்த கருத்து அறிவாற்றலை தருகின்ற பெரிய ஸ்தாபனங்களில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறதோடல்லாமல், நம்முடைய பொதுவான பள்ளிக்கூட பாட புத்தகங்களிலும் படிப்படியாக சேர்க்கப்பட்டு வருகிறது.

உண்மைதான், ஒரு சிலர் மட்டுமே இன்றும் சிருஷ்டிகரை முற்றிலுமாக மறுதலிக்க துணிகரம் கொண்டவர்களாக இருக்கிறார்கள், என்றாலும் பக்தியுள்ளவர்கள் கூட இந்தக் கருத்தின்படி சிருஷ்டிப்பு இயற்கையின் சட்டப்படிதான் என்று சொல்லும்போது அவர்கள் தங்கள் விசுவாசத்தின் அடிப் படையையே பலகீனப்படுத்துவதோடு அல்லாமல் மற்றவர் களுடைய விசுவாசத்தையும் பலகீனப்படுத்துகிறார்கள். இன்னும் அதிகமாக பின்னோக்க வேண்டியதில்லை, அவர்கள் அனுமானிக் கிருர்கள் – நம்முடைய சூரியன் அதிகமான அளவில் வாயுக்களை வெளியேற்றியது, அவைகள் சேர்ந்து திரட்சியாகி பூமி உருவாகியது; சிறிது சிறிதாக ''**புரோட்டோபிளாசம்**'' உருவானது, அதன்பிறகு ''ஒரு **சிறிய ஜீவ அணு**'' தொடங்கியது, ஆனால் எப்படி என்று தெரியாது. இந்த சிறிய ஜீவனை தொடங்குவதற்கு கூட ஒரு தெய்வீக வல்லமை வேண்டும் என்று அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும், ஆனால் அவர்களோ ஒரு தேவன் – சிருஷ்டிகர் தேவையில்லை என்பது போல் இதற்கும் சில இயற்கைச் சட்டத்தை இயந்திரகதியில் தேடிக் கொண்டிருக்கிருர்கள். இந்த கண்டுபிடிப்பு கிட்டத்தட்ட முடிந்துவிட்டது போல் சொல்லப்படுகிறது. இந்த அறிஞர்கள் தேவனுக்குப் பதிலாக ஒரு குருட்டு, செவிட்டு தேவனை –இயற்கையை, அதன் வேலைகள், சட்டங்கள், சீற்றங்கள் ஆகியவைகளைக்குறித்து சிந்திக்கிறார்கள், பேசுகிறார்கள்.

இயற்கையின் விதிகளின்படி **புரோட்டோபிளாசம் (**Protoplasm) ஜீவஅணுவை உற்பத்தி செய்தது, அது நெளிந்து வளைந்து தனது சொந்த இனங்களை உற்பத்தி செய்தது, பின்னர் ஒரு வால் தேவை என அறிந்து அதையும் உருவாக்கிக் கொண்டது என்று அவர்கள் சொல்கிறார்கள். பிறகு அவற்றில் அதிபுத்திசாலியான சந்ததி ஒன்று (மீன்) சிறகு தேவை என தீர்மானித்து அதையும் உருவாக்கினது. இன்னொன்று, பின்னர், பசியுள்ள ஒரு சகோதரனால் துரத்துதலுக்குட்பட்டு, தண்ணீரைவிட்டு வெளியே குதித்ததினிமித்தம் யோசனைப் பெற்று சிறகிலிருந்து இறக்கையை உருவாக்கினது; பின்னர், இந்த நவீனத்தை விரும்பி தண்ணீருக்கு வெளியே இருந்து விட்டது; அதன் பின்னர் கால்களும் விரல்களும் பிரயோஜனமாயிருக்கும் என்று தீர்மானித்து அவைகளையும் உருவாக்கினது; இந்த குடும்பத்தைச் சேர்ந்த மற்றவை வேறு எண்ணங்களை பின் பற்றி நம்மை சுற்றியிருக்கிற பல்வேறு வகையான





மிருகங்களுக்கு சாட்சியாக இருப்பதுபோல குறைவில்லாத அளவுக்கு உற்பத்தி செய்தன. எனினும் காலப்போக்கில் முதல் ஜீவஅணுவின் சந்ததிகளில் ஒன்று குரங்கைப் போன்ற பரிணாமத்தைப் பெற்றது. எனினும் அதன் மனதில் ஒரு நூதன எண்ணம் தோன்றியது– அது தனக்குத்தானே சொல்லிக் கொண்டது : என் வாலை விட்டு விடுவேன்; என் கரங்களை கால்களைப்போல உபயோகிப்பதை நிறுத்தி விடுவேன்; என் அடர்த்தியான ரோமங்களையும் உதறிவிடுவேன்; மேலும் ஒரு மூக்கு, முன் நெற்றி, மற்றும் நீதிநெறி சம்பந்தமாகவும் சிந்திக்கும் உறுப்புகளோடும் கூடிய மூளை ஆகியவற்றை உண்டுபண்ணுவேன்; தைத்த ஆடைகளையும் ஒரு உயர்ந்த பட்டு தொப்பியையும் அணிந்து கொள்வேன், என்னை நான் டார்வின், எல் எல் டி,. என்று அழைப்பதோடு எனது பரிணாம வளர்ச்சியின் பதிவேட்டை எழுதுவேன்.

அந்த டார்வின் திறமைசாலி என்பதற்கு அவர் தன்னுடைய கோட்பாடுகளை தன் சக மனிதர்கள்மேல் திணித்தது சான்று பகருகிறது. இருந்தபோதிலும் பக்தியுள்ள தேவ பிள்ளை, ஒரு ஆள்தத்துவமுடைய சிருஷ்டிகர்மேல் நம்பிக்கை வைத்து, வேதம் அவரது வெளிப்பாடு என்பதை அவசரப்பட்டு விட்டுவிடாதிருக்கும் போது, டார்வினின் கோட்பாட்டிலுள்ள குதர்க்கத்தை சீக்கிரமாக கண்டுகொள்ள முடியும். டார்வின் புறாக்களைக்கொண்டு சில விநோதமான இனங்களை உருவாக்க முடிந்தது. அதாவது அவைகளின் கால்களில் சிறகுகள், தலைகளில் கிரீடங்கள், பிதுக்கிக் கொண்டிருக்கிற தொண்டைகள் போன்றவைகளை உருவாக்க முடிந்தது. மற்றவர்களும் இதுபோன்றே கோழி, நாய், குதிரை போன்றவைகளுடன் செய்திருக்கிறார்கள். புஷ்பக் கலைஞரும் பூக்கள், செடிகள் போன்றவைகள் மேல் பரிசோதனை செய்து மேற்கூறிய அதே பலனை பெற்றிருந்தார்கள். டார்வினிடம் உள்ள புதிய காரியம், அவருடைய **கோட்பாடு**–அதாவது எல்லா ஜீவராசிகளும் ஒரு பொதுவான ஆரம்பத்திலிருந்து **விருத்தியாயின** என்பதாகும்.

ஆனால், டார்வின் தன் புறாக்களோடு செய்த பரிசோதனை களும், மற்ற ஒவ்வொரு நூதன இனங்களோடு செய்த பரிசோதனை களும், தேவன் ஒவ்வொரு சிருஷ்டியையும் அதனதன் **ஜாதிகளின்படி** படைத்தார் என்ற வேதத்தின் கூற்றை ஊர்ஜிதப் படுத்துவதாகத்தான் இருக்கிறது. ஒவ்வொரு **இனத்திலும்** அற்புதமான வகைகளுக்கு சாத்தியக்கூறுகள் உள்ளன; ஆனால் அந்த வகைகள் இணைக்கப்பட

முடியாது, அல்லது புது இனங்கள் உருவாக்கப்பட முடியாது. சாதாரணமாக செய்யக்கூடியது வெவ்வேறு இனங்களை ஒன்றோடொன்று இணைப்பது. மேலும் இப்படி உருவாக்கப்பட்ட புதிய இனங்கள் தங்களின் இனங்களை விருத்தியாக்க முடியாது என்பதை அனைவரும் அறிந்திருக் கிறார்கள். மற்றவர்கள் செய்திருப்பது போலவே தன்னுடைய நூதன புறாக்களை அவைகளின் மற்ற இனத்திலிருந்து கவனமாக தனித்து வைக்க வேண்டியிருக்கிறது என்பதை டார்வின் புரிந்திருக்க வேண்டும். இல்லையென்றால் அவைகள் சீக்கிரமாக சீரழிந்து சாதாரண நிலைமைக்கு வந்துவிடும். ஆனால் இயற்கையில் நாம் பலவிதமான இனங்களைப் பார்க்கிறோம்; ஒவ்வொன்றும் அதனதன் வகையைப்போல முற்றிலுமாக ஒன்றிலிருந்து ஒன்று தனியாக, எந்தவிதமான செயற்கையான கவனிப்பும் இல்லாமல் அவைகளின் சிருஷ்டிகரின் நியமத்தின்படி வைக்கப்பட்டுள்ளன. ஆதியாகமத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள நமது தேவனையும், அவரது ஞானத்தையும், அவரது வல்லமையையும், மனிதனுடைய யூகம் ஒதுக்கிவைத்துவிட்டு, உண்மையை தவற விட்டுவிட்டாலும், ஆள்தத்துவமுடைய சிருஷ்டிகரில் விசுவாசிகளாயிருக்கிற நாம் தைரியமாக இருக்கலாம்.

ஆதியாகமத்தின் யுகநாட்களை 24 மணிநேர நாட்களென்று தவறாக புரிந்து கொள்ளும்போது நாம் சிருஷ்டிகராகிய தேவன் மேல் வைக்கும் விசுவாசத்தை பெலவீனப்படுத்துவதோடு ஆதியாகமத்தில் சொல்லப் பட்டவைகள் அவருடைய வெளிப் பாடுகள் என்பதையும் மறைக்கிறது. பாறைகள், களிமண்களின் பலவித அடுக்குகள், அவைகள் காண்பிக்கக் கூடிய பெரிய மாறுதல்களுக்கு நீண்ட காலங்கள் சென்றிருக்கும் என்ற எல்லா சர்ச்சைகளையும் தாண்டி விளக்குகிறது. வேதாகமம் ஒரு யுக நாளை கற்றுக் கொடுக்கிறதை நாம் காணும்போது, பாறைகள் வேதாகம குறிப்புகளுக்கு மிக இசைவாக கொடுக்கும் சாட்சியத்தை கேட்க நாங்கள் ஆயத்தமாக இருப்பது மட்டுமல்லாமல் நமது வேதத்தில் நாம் வைத்திருக்கிற விசுவாசம் இன்னும் பலப்படுத்தப் படுகிறது. நாம் நம்முடைய எண்ணத்தின்மேலோ அல்லது மற்றவர்களின் யூகங்களின் மேலோ நம்பிக்கை வைக்காமல் இயற்கையின் உண்மைகளைப் பூரணமாக உறுதிப்படுத்தும் சிருஷ்டிகரின் வார்த்தையின்மேல் நாங்கள் நம்பிக்கை வைக்கிறோம் என்று உணர்கிறோம்.





# பிரபஞ்ச தோற்றத்தின் ஒரு கோட்பாடு

நம்முடைய ஒரு சில வாசகர்களின் பிரயோஜனத்திற்காக ஆசிரியரின் கவனத்தை அதிகமாய் ஈர்த்த ''வைலியன் கோட்பாடு'' (Vailian Theory) அல்லது''கெனாபி தியரி'' (Canopy Theory) என்ற சிருஷ்டிப்பின் காலத்தைப்பற்றிய கருத்துக்களில் ஒன்றை நாங்கள் சுருக்கமாக இங்கு தருகிறோம். அதைத் தொடர்ந்து இந்தக் கருத்துக்கும் ஆதி. 1:1; 2 :3 ஆகியவற்றில் சொல்லப்பட்டவை களுக்கும் உள்ள ஒருமைப்பாட்டை பார்க்க முயற்சிப்போம்.

''பூமியானது ஒழுங்கின்மையும், வெறுமையும், இருள் சூழ்ந்ததுமாயிருந்தது'' என்று ஆதி. 1:2 ல் சொல்லப்பட்ட நிலைமையில் ஆரம்பிக்கும்போது, தேவன் எப்படி பூமியின் அணுக்களை முன்பு கூட்டிச்சேர்த்தார் என்பதை வெளிப்படுத்தாமல் விட்டதை ஞானவான்கள் யூகிக்க முயற்சிக்கமாட்டார்கள். வெளிப்படுத்தப்படாதவைகள் தேவனுக்குரியவைகள்; ஏற்றக் காலத்தில் அவருடைய மற்ற வெளிப்படுத்துதல்களுக்கு நாம் பொறுமையுடன் காத்திருப்பது நல்லது. பூமியின் உட்பாறைகளைத் தவிர அவைகளின் மேல் ஏறக்குறைய ஒன்றன்மேல் ஒன்றாக மென்மையாகவும் ஈரப்பதமுள்ளதாகவும் அநேக அடுக்குகளால் பூமியின் மேற்பாகம் முற்காலத்தில் (இப்படி இருந்ததற்கு ஆதாரம் உண்டு) இருந்ததை பகுத்து ஆராயும் கண்களினாலும், கடப்பாறை, மண்வெட்டி போன்றவைகளின் மூலமும் மனிதன் கண்டுபிடித்திருக்கிறான். இந்த உட்பாறைகள் ஒருகாலத்தில் அதிகமான வெப்பத்தினிமித்தமாக மென்மையாகவும் திரவமாகவும் இருந்தன என்பதைத் தெளிவாக விளக்குகின்றன. மேலும் பூமியானது மேற்பாகத்திலிருந்து அதிக ஆழமில்லாத உட்புறத்தில் இன்னும் உஷ்ணமாயும் உருகிய நிலையிலும் இருப்பதாக விஞ்ஞானிகள் பொதுவாக ஒத்துகொள்கிறார்கள்.

ஒரு காலத்தில் இந்த ஆதாரமான, எரிமலை பாறைகள் (கருங்கற்கள், கடினமான கற்கள் முதலியன) எல்லா எரியக்கூடிய மூலப்பொருட்களை வெளியேற்றும் அளவுக்கு உஷ்ணமாக இருந்திருக்க வேண்டும். மேலும் அவைகள் அடித்தளத்திலுள்ள பாறைகளாக இருக்கிற படியால் ஒரு காலத்தில் முழு பூமியானது அதிக உஷ்ணமாக இருந்ததென்று உறுதியாக நாம் முடிவெடுக்கலாம். அந்த சமயத்தில்,

தண்ணீரும் தாதுப் பொருட்களும் (இப்போது தண்ணீருக்குள் பலவித அடுக்குகளாக மேல் அடுக்கில் காணப்படுகிறவைகள்) வாயுக்களாக வெளியேற்றப்பட்டிருக்க வேண்டும்; மேலும் பூமியைச்சுற்றி ஒவ்வொரு திசையிலும் ஊடுருவிச்செல்ல முடியாத மண்டலமாக மைல் கணக்கில் இருந்திருக்க வேண்டும். பூமி அதன் அச்சைக்கொண்டு சுழலும் சுழற்சி அதைச் சுற்றியுள்ள இந்த வாயுக்களையும் பரப்புகிறது. இதன் விளைவு அவைகளை குறிப்பாக பூமத்திய ரேகையின்மேல் ஒன்றுசேர்ப்பதாக இருக்கும். பூமி குளிர்ந்தால் இவைகளும் குளிரும்; மேலும் இவ்வாறாக வாயுக்களிலிருந்து திடப்பொருளாகவும் திரவப்பொருளாகவும் பிரிக்கப்படுகின்றன; கனமான தாதுக்கள் பல அடுக்குகளில் கீழ்பாகத்தை நோக்கி ஈர்க்கப்படுகின்றன. பூமி அந்த காலக்கட்டத்தில், இப்போது சனிக்கிரகம் தன் ''வளையங்களுடன்'' தோற்றமளிப்பதுபோல காணப்பட்டிருக்கும்.

இந்த குளிர்படுத்தும் செயல் முன்னேற்றமடைந்ததால் பிரிக்கப்பட்டு தூரத்திலிருந்த இந்த வளையங்கள் படிப்படியாக பூமியைக்காட்டிலும் ஒரு வித்தியாசமான சுழற்சியை பெற்றதினால் இவ்வாறாக பூமியை நோக்கி நெருங்கி நெருங்கி வந்தன. இவைகள் பூமியின் மேற்பரப்பை நோக்கி வேகமாக தள்ளப்பட்டன. ''ஆகாயவிரிவு'' அல்லது ''பரந்தவெளி'' அல்லது ''காற்றுமண்டலம்'' உருவாக்கப்பட்ட பின்பு இந்த ஜலப்பிரளயம் கீழிறங்கிக் கொண்டிருக்கும் வளையங்களிலிருந்து இரு துருவங்களின் திசையிலிருந்து இயல்பாக வந்தடையும். பூமியின் மையவிலக்கு விசையின் மையமாகிய பூமத்திய ரேகையிலிருந்து இந்த துருவங்கள் தூரத்திலிருப்பதால் அங்கே குறைந்த எதிர்ப்புப் சக்தியே இருந்திருக்கும். வெவ்வேறான நீண்ட காலங்களில் இந்த வளையங்கள் உடைந்து அநேக பிரளயங்களை கொடுத்து பூமியின் பரப்பின் மீது அடுக்குகளின் மேல் அடுக்குகளை குவித்தது. பூமத்திய ரேகையை நோக்கி துருவங்களிலிருந்து பாய்ந்து வந்த தண்ணீர்கள் மணல், சேறு, மற்றும் தாதுப் பொருட்களை பலவிதமாக பரப்பும். ஆதியாகமத்தின் வருணனையின் ஆரம்பத்தில் விவரிக்கப்பட்ட பிரகாரம் தண்ணீர் தாதுப்பொருட்களால் திடமாக நிறைந்து பூமியின் முழு மேற்பரப்பையும் இவ்வாறாக நிரப்பிற்று.

ஆதியாகமத்தில் சொல்லப்பட்டபடி எவ்வேழாயிரம் வருஷங்களைக்கொண்ட இந்த நீண்ட ''நாட்கள்'' ஒவ்வொன்றின்





போதும் ஒரு குறிப்பிட்ட வேலை அபிவிருத்தியடைந்தது. ஒவ்வொன்றும் அநேகமாக ஒரு பிரளயத்தில் முடிந்து, பெரிய மாற்றங்களை உண்டுபண்ணி சிருஷ்டிப்பின் இன்னும் சில படிகளுக்கும் மனிதனுக்காக ஆயத்தம் செய்யவும் வழியை உண்டு பண்ணிற்று. இந்த ''வைலியன் கோட்பாடு'' கூறுகிறதாவது: இந்த வளையங்களில் கடைசியான வளையம் தாதுப் பொருட்கள், மாசுகள் இல்லாத சுத்தமான ஜலமாக இருந்தது; மேலும் இது ஆதாமின் சிருஷ்டிப்பின் நாளில் உடைபடாமலும் கீழே வராமலும் இருந்தது; ஆனால் இது காற்று மண்டலத்திற்கு மேலாக சிறிதளவு ஒளி ஊடுருவும் ஒரு திரையைப்போல பூமியைச் சுற்றி முழுவதுமாக வியாபித்திருந்தது. ஒரு உஷ்ண வீட்டில் வெண்மையாக்கப் பட்ட கண்ணாடி பயன்படுவது போல இந்த தண்ணீர் மண்டலம் பூமியில் சீதோஷ்ண நிலையை சமப்படுத்த பயன்பட்டது; துருவங்களில் சீதோஷ்ண நிலை பூமத்திய ரேகையிலிருப்பதைக் காட்டிலும் வேறுபட்டிருந்தாலும் அது மிக குறைவாகவே இருந்திருக்கும். இப்படிப்பட்ட ஒரே சீரான நிலைமையில், புவியியல் அமைப்பியல் கூறுவதுபோல, உஷ்ண பிரதேச செடிகள் எங்கும் வளரும்; சீதோஷ்ண நிலையின் வேகமான மாறுதலினால் எற்படக்கூடிய புயல்கள் அப்போது காணப்படாமல் இருந்திருக்கும்; மேலும் இது போன்ற காரணங்களினால் அப்போது அங்கே மழை இல்லாதிருந்திருக்கும்.

ஜலப்பிரளயம் வரையில் பூமியில் மழையில்லாதிருந்தது. தாவரங்கள் மூடுபனியினால் (ஒரு பனி போன்ற, அல்லது சற்று ஈரமான, உஷ்ண வீடு போன்ற நிலை) நனைக்கப்பட்டன. (ஆதி.2: 5,6) நோவாவின் நாட்களில் வந்த ஜலப் பிரளயத்தைத் தொடர்ந்து பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன; மனிதனின் ஆயுசு நாட்கள் மிகவும் குறைவுபடத்தொடங்கின; தண்ணீர் மண்டலம் உடைந்தபோது உஷ்ண வீடு போன்ற நிலை அற்றுப்போயிற்று; சூரியனின் பூமத்திய ரேகை பாதை அதிக உஷ்ணமாக மாறிற்று; அதே சமயத்தில் துருவங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மிக பயங்கரமாக இருந்திருக்கவேண்டும். அதாவது ஒரு உஷ்ண வீட்டின் சீதோஷ்ண நிலையிலிருந்து ஆர்டிக் (வட துருவ) குளிர் நிலைக்கு சடுதியான ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

இந்த சீதோஷ்ண நிலையின் மாற்றத்திற்கு பலமான சாட்சியங்கள் வட துருவத்தில் காணப்பட்டன. இரண்டு முழு பெரிய மிருகங்கள் திடமான பனிக் கட்டியில் பதிந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது,

அவைகளை அந்த பனிக் கட்டிகள் துரிதமாக உறைந்து போக செய்தது. சரித்திரபிரகாரமாக யானைகள், பெரிய மிருகங்கள் போன்றவை வசிக்கவே முடியாத அளவுக்கு குளிரான இதே உறைந்த சைபீரியாவில் டன் கணக்காக யானைத் தந்தங்கள் காணப்பட்டுள்ளன. அதே போலவே ஒரு கருப்பு மானும் அந்த வட துருவத்தில் ஒரு பெரிய பனிப்பாறையில் பதிந்திருப்பது காணப்பட்டது. தற்சமயம் புல் வளரமுடியாத ஓர் இடத்தில் அந்த கருப்பு மான் பனிக்கட்டியில் உறைந்து மரணம் அடைவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பே புல்லை சாப்பிட்டிருக்கவேண்டும். ஏனென்றால் அதன் வயிற்றில் ஜீரணமாகாத புல் காணப்பட்டது. இந்த உண்மையின் மூலம் அந்த கருப்பு மான் திடீரென அழிக்கப்பட்டது என்பது தெளிவாக நிரூபிக்கப்படுகிறது.

திடீரென்று தண்ணீர் கீழே வந்ததின் காரணம்– பூமி மற்றும் சூரியனுடைய வெப்பநிலையை சமநிலையில் வைத்து மூடியிருந்த நீர் மண்டலம் திடீரென்று உடைந்து, இது வடதுருவ பகுதிகளில் பெரிய பரப்பளவு பனிநிலங்களையும், பனிப்பாறைகளையும் உண்டு பண்ணிற்று. இந்த இடத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கான பனிப்பாறைகள் சுழன்று தெற்குபுறமாக பூமியின் மத்திய ரேகையை நோக்கி மிதந்து வருகின்றன. நம்மால் நிதானிக்க முடிந்தவரை, பல நூற்றாண்டுகளாக இது வழக்கமாக இருந்திருக்க வேண்டும், ஆனால் தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது. பெரிய பனிப்பாறைகள் வேகமாக நகருகிற தண்ணீரால் சுமந்து வரப்பட்டு வடஅமெரிக்கா முழுவதுமாக குன்றுகளில் தெளிவாகக் காணக்கூடிய பாதாளப் பிளவுகளை உண்டு பண்ணினபோது புவி அமைப்பியல் வல்லுநர்களின் பனிக்காலம் அல்லது பனியாற்றின் காலத்தை நாம் இங்கே காண்கிறோம். வடமேற்கு ஐரோப்பாவும் அதன் குன்றுகளில் இதே விதமாக இருப்பதற்கு சாட்சி பகருகிறது. ஆனால் தென்கிழக்கு ஐரோப்பா, அர்மீனியா மற்றும் அதற்கு அருகாமையில் உள்ள இடங்களில் இப்படியில்லை– இந்த இடம் மனுக்குலத்தின் தொட்டில், இங்கு (நோவாவின்) பேழையும் கட்டப்பட்டு, இதற்கு சமீபமான அரராத் மலையில் கடைசியாக தங்கியது. பேராசிரியர் ரைட் மற்றும் சர்.ஜே. டபிள்யு. டாசன் எல்.எல்.டி., எப்.ஆர்.எஸ்., ஆகியோரின் கருத்தின்படி ஐரோப்பாவுக்கு அருகாமையில் ஒரு பொதுவான பூமியின் மூழ்குதலும் தொடர்ந்து எழும்புதலும் நடந்தன. பொதுவாக இந்த சாட்சி அறிவிப்பது போல் தோன்றுவது என்னவெனில், பேழையானது வேகமாக செல்கின்ற



தண்ணீரிலிருந்து விலகி கிட்டதட்ட நீர்ச்சுழியற்ற இடத்தில் மிதந்தது. அந்த பகுதிமுழுவதும் மிக அதிகமான வண்டல் சேர்க்கை இருப்பதாக அறிவிக்கப்பட்டதின் மூலம் இது சுட்டிகாட்டப்படுகிறது. பார்த்த வண்ணமாக முழு பூமியும் வட, தென் துருவங்களிலிருந்து வந்த ஜலப்பிரளயத்திற்கு உட்படுத்தப்பட்டது; அந்த சமயம் மனுக்குலத்தின் ஆரம்பம் விசேஷமாக முதலில் குறைக்கப்பட்டு பின்பு ஏற்ற சமயத்தில் விருத்தியாக்கப்பட்டது. இதைக்குறித்து (ஒபர்லின் ஒ கல்லூரியின்) பிரபல புவி அமைப்பியல் வல்லுநரும் பேராசிரியருமான ஜீ.எப். ரைட்டின் வார்த்தைகள் 30.3.1901ல் நியூயார்க் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்டது பின் வருமாறு :

## ஜலப்பிரளயம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது

''பிரபல புவி அமைப்பியல் வல்லுநரும் ஒபர்லின் ஒ கல்லூரியின் பேராசிரியருமான ஜார்ஜ் ஃப்ரெட்ரிக் ரைட் ஐரோப்பாவிலிருந்து திரும்பினார். அவர் 'வட அமெரிக்கவின் பனி'' மற்றும் பனிக்கட்டி யாற்றின் காலத்தை ஆராய்ந்து விளக்குவது குறித்த மற்ற புவி அமைப்பியல் வேலைகளையும் எழுதினார். அவர் பூமியெங்கும் விஞ்ஞான சுற்றுப்பயணம் செய்திருக்கிறார். அவருடைய ஆராய்ச்சிகள் ஆசியாவின் மற்ற பகுதிகளுக்கும், ஆப்பிரிக்காவுக்கும் அவரை கொண்டு சென்றாலும், சைபீரியாவில் புவி அமைப்பியலினால் உண்டான அறிகுறிகளையும் அமைப்புகளையும் குறித்து ஆராய்வதில் அவரது நேரத்தின் பெரும் பகுதியை செலவிட்டார்.

''பேராசிரியர் ரைட்டின் முக்கியமான நோக்கம் என்னவென்றால் வெகுகாலமாக புவி அமைப்பியல் வல்லுநருடைய சர்ச்சையாக இருந்து வந்த பனிக்கட்டியாற்றின் காலத்தின் போது வட அமெரிக்காவும் ஐரோப்பாவின் சில பகுதிகளும் பனியால் மூடப்பட்டிருந்தது போல சைபீரியாவும் மூடப்பட்டிருந்ததா என்ற கேள்விக்கு முடிந்தவரை விடை கண்டு பிடிப்பதே.

''அதிகமான பெரிய புவி அமைப்பியல் வல்லுநர்கள், அநேகமான பிரபல ரஷ்ய விஞ்ஞானிகள் உட்பட, சைபீரியா பனியினால் மூடப்பட்டிருந்தது என்று நம்புகிறார்கள்.

''அவரது தற்கால ஆராய்ச்சிகளின் முடிவின்படி பழங்காலத்தில் வட அமெரிக்கா பனிக்கட்டியாலும், சைபீரியா ஜலத்தினாலும் சூழப் பட்டிருந்தது என்று பேராசிரியர் ரைட் உறுதியாக நம்புகிறார்.

''மேலும் அந்த ஜலமும், பனிக்கட்டியும் வேதாகமத்தில் சொல்லப்பட்ட ஜலப்பிரளயத்தினால் உண்டானவைகள்.

முதலாவது ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட ஜலப்பிரளயத்தின் விளக்கங்களை சுருக்கமாக பார்ப்போம் :

''ஜலப்பிரளயம் நாற்பது நாள் பூமியின்மேல் உண்டானபோது, ஜலம் பெருகி, பேழையைக் கிளம்பப்பண்ணிற்று. அது பூமிக்குமேல் மிதந்தது.

''ஜலம் பூமியின்மேல் மிகவும் அதிகமாய்ப் பெருகினதினால் வானத்தின் கீழ் எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன.

''மூடப்பட்ட மலைகளுக்கு மேலாய் பதினைந்து முழ உயரத்திற்கு ஜலம் பெருகிற்று.

''வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவ சுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டுபோயின....நோவாவும் அவனோடே பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டன.

''ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பது நாள் மிகவும் பிரவாகித்துக் கொண்டிருந்தது.'' *(ஆதி.7: 17–24)*

இப்பொழுது பேராசிரியர் ரைட் இதைக் குறித்து என்ன குறிப்பிடுகிறார் என்பதைக் கேட்போம்:

''56 ஆவது பாகையின் தெற்கே பனிக்கட்டியாற்றின் அபூர்வ தோற்றம் இருந்ததற்கான அறிகுறிகளை நான் காணவில்லை. அதன் வட பகுதிக்கு நான் செல்லவில்லை; ஆனாலும் நியூயார்க்கின் தூர தெற்குப்பகுதியில் பனிக்கட்டி யாற்றின் அறிகுறிகள் நாம் சொல்லுகிற வண்ணம் இப்பொழுது காணப்படுவதி லிருந்து அந்த நிலம் பனிக்கட்டியால் சூழப்பட்டிருந்தது என்பதை மற்றக் காரியங்களிலிருந்து நான் ஏற்றுக் கொள்கிறேன்.

''அந்த முழுப்பகுதியின் விஸ்தாரமான தாழ்விற்கான அறிகுறிகளை நாங்கள் காணவில்லை. இது இங்கே ஒவ்வொன்றிலும் ஒரு புது வெளிச்சத்தை காட்டுகிறது.

''கருங்கடலின் கடற்கரையில் ட்ரெபிசாண்ட்டில் 700 அடி பள்ளத்தாக்கு இருந்ததற்கான ஆதாரம் கிடைத்தது. குன்றுகளின் மேல் சரளைக்கல் படிமாணங்களின் மூலம் இது காட்டப்பட்டது.

''துருக்கிஸ்தானின் மத்திய பகுதியில் தண்ணீர்கள் அதன் உச்சியை அடைந்தது. ஏன் என்றால் அங்கே கடல் மட்டத்திற்கு மேலாக 2000 அடி உயரத்திற்கு இந்த படிமாணங்களை நாங்கள் கண்டோம்.

'' நாங்கள் துருக்கிஸ்தானில் கண்ட அதே கறுப்பு மண்படிவத்தால் தென் ரஷ்யா பரந்திருந்தது.

''பூமியின் இந்த பகுதி ஜலத்தினால் மூடப்பட்டிருந்தது என்பதற்கு இன்னும் வேறு ஆதாரங்கள் இருந்தன. சைபீரியாவில், கடல் மட்டத்திற்கு 1600 அடிகளுக்கு மேல் இருக்கும் பைக்கால் ஏரியில் இன்னும் நீர் நாய்கள் இருப்பது ஆதாரங்களில்





ஒன்றாகும். காஸ்பியன் கடலில் காணப்படுகிற அதே இன நீர் நாய்களை, வட துருவங்களில் நாங்கள் கண்டோம்.

''எனவே வெள்ளம் வடிந்த போது அவைகள் அங்கேயே தங்கி விட்டன என்பது ஒரே சாத்தியகூறு. கீஃப்( Kief ) நகரில் நிப்புர்( Nippur) நதியில், மனிதனுடைய காலத்திற்கு பின்பு வெள்ளம் வந்ததைக் காட்டும் கற்கருவிகள், கறுப்பு மண் படிவத்திற்கு ஐம்பத்து மூன்று அடிகளுக்கு கீழே காணப்பட்டதே எல்லாவற்றையும் விட மிகவும் அற்புதமான கண்டுப்பிடிப்பு.

''எனவே, இந்த நிலத்தாழ்வின் ( depression ) காலத்தை நிர்ணயிக்க இது எங்களுக்கு பிரயோஜனமாயிருந்தது. மனிதன் வந்ததிலிருந்து ட்ரெபிசாண்ட்டில் (Trebizond) 750 அடி பள்ளம் (நிலத் தாழ்வு) இருந்திருக்கிறது என்பதையும் தெற்கு துருக்கிஸ்தானில் 2000 அடிகளுக்கு ஆழத்தில் ஜலம் இருந்தது என்பதையும் காட்டுகிறது. பனிக்கட்டியாற்றின் காலத்திற்கு முன்பு வட அமெரிக்காவில் அவை செய்யப்பட்டது போல அந்த கற்கருவிகள் காணப்பட்டன. பனிக்கட்டியாறு திடீரென்று இங்கு ஏற்பட்டபோது, அந்த பள்ளம் ஏற்பட்டது என்பதை நம்புவதற்கான நல்ல ஆதாரத்தை இது கொடுக்கிறது.

''உண்மையாக சொல்லப்போனால் இது ஜலப்பிரளயம்.''

ஆரம்பத்திலிருந்து முடிவை அறிந்த யேகோவா தேவன் மனிதனை பூமியில் கொண்டுவந்து, கடைசி வளையமானது பூமியில் வந்து நோவாவின் காலத்தில் பொல்லாத சந்ததியாரை ஜலப்பிரளயத்தினால் சரியான நேரத்தில் அழிப்பதற்கும், ''இப்பொழுது இருக்கிற பொல்லாத உலகம்'' என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ள இந்த யுகத்தை ஆரம்பிப்பதற்கும் சரியாக காலத்தை நியமித்தார்.

நீர் மண்டலம் அகற்றப்பட்டதினிமித்தம் கோடைக்காலம் குளிர்காலம் என்று மாறி மாறி வரும் சீதோஷ்ண நிலை ஏற்பட்டதுமல்லாமல், கொடிய புயல்களுக்கும் அது வழி வகுத்தது; ஜலப்பிரளயத்திற்கு பின்னர் முதன் முதலில் காணப்பட்ட வான வில்லையும் உண்டாக்கியது. ஏனெனில் இதற்கு முன்பதாக வானவில் தோற்றத்தை ஏற்படுத்த சூரியனின் நேரடி ஒளிக்கதிர்கள் நீர்மண்டலத்திற்குள் புக முடியவில்லை. *(ஆதி.9:12–17)*

மேற்சொல்லப்பட்டதை எழுதிய பின்னர், பேராசிரியர் வைல் தானே எழுதிய சுருக்கமான அறிக்கையை **''சயின்டிஃபிக் அமெரிக்கன்''** என்ற பத்திரிக்கையிலிருந்து நாங்கள் எடுத்து கீழே தருகிறோம் :–

# ''உறைந்த மாபெரும் மிருகம்''

*''சயின்டிஃபிக் அமெரிக்கன் பத்திரிக்கையின் ஆசிரியருக்கு :*

*''பனிக்கட்டி நிறைந்த கிழக்கு சைபீரியாவின் பகுதியில் டாக்டர் ஹெர்ஸ் மூலம் சமீபத்தில் ஒரு பெரிய மிருகத்தின் உடல் பனியில் புதைந்திருப்பதை கண்டுபிடிக்கப்பட்ட செய்தியை ஏப்ரல் 12 ல் வெளியிடப்பட்ட உங்கள் பத்திரிக்கையின் செய்தியை மிகவும் ஆர்வத்துடன் படித்திருக்கிறேன். இது எனக்கு புவி அமைப்பியல் வல்லுநரின் பாதையில் கிடைத்த ஒரு அரும் பெரும் காரியமாக தோன்றுகிறது. வியாழன் மற்றும் சனி கிரகங்களை தற்போது மேகம் போன்ற வாயுக்கள் சூழ்ந்திருப்பது போல புராதன பூமியை சூழ்ந்திருந்த வாயுக்கள் தொடர்ந்து படிப்படியாக குறைந்ததினிமித்தம் பூமியில், பனிக்கட்டி ஆற்றின் சகாப்தங்களும், ஜலப்பிரளயங்களும் ஏற்பட காரணமாயிருந்தது என்று கூறுவதற்கு இது முக்கிய சாட்சியாக இருக்கிறது.*

*''சமீபத்திய புவி அமைப்பியல் காலம் வரைக்கும் கூட அண்டவெளியில் மீதமுள்ள நீராவிகள் வியாழன் கோளின் வாயு வளையத்தை போல பூமியை சுற்றிக் கொண்டிருந்திருக்கும் என்று எனது புவி அமைப்பியல் வல்லுநர்களாகிய சகோதரர்களுக்கு யோசனை சொல்லுகிறேன். இப்படிப்பட்ட நீராவிகள் முக்கியமாக எதிர்ப்புசக்தி குறைவாகவும், ஈர்ப்புசக்தி அதிகமாகவும் உள்ள துருவ பிரதேசங்களில் உள்ள வழிகள் மூலமாக பெரிய பனிக்கட்டி சரிவுகளாக வந்து விழ வேண்டும். இங்கும் கூட, இப்படிப்பட்ட வாயு மண்டலம் அல்லது உலகத்தின் கூரை துருவங்கள் வரைக்கும் சீதோஷ்ண நிலையை பக்குவப்படுத்தி, வட துருவத்தில் உள்ள அந்த மாபெரும் மிருகத்துக்கும் அதன் இனத்துக்கும் புல் வெளியை – பசுமையான கூரையின் கீழ் பசுமையான பூமியை உண்டாக்கியிருக்க வேண்டும். இது ஏற்றுக்கொள்ளப்பட்டால், செழிப்பான உலகத்தை அழிக்க வந்த போர்வை போன்ற திடீர் பனிக்கட்டி சரிவுகளின் அளவிற்கும், திறமைக்கும் நாம் எல்லைகளை வரையறுக்க முடியாது. டாக்டர் ஹெர்ஸின் பெரிய மிருகமும், தங்கள் வயிறுகளில் ஜீரணமாகாத உணவுடன் பனிக்கட்டியில் புதையுண்டு காணப்பட்ட மற்ற மிருகங்களைப் போல, திடீரென்று பனிக்கட்டி வந்ததினிமித்தம் புதையுண்டு போயிருக்கவேண்டும் என்று நிரூபிக்கிறது. இந்தவிஷயத்தில் அதன் வாயில் புல் அரைக்கப்படாமலிருந்தது பனிக் கல்லரையில் தன் மரணத்தை சந்தித்ததை கூறுகிறது. மேலே சொல்லப்பட்டது ஏற்றுக்கொள்ளப் படுமென்றால் **பனியாற்றுக்கான ஆதாரங்கள்** இருந்திருக்கிறது. பூமி பனியைப் பெற்றுக் கொள்ள குளிர வேண்டியிருந்தது என்ற தவறான கருத்துக்கு நாம் தப்பித்துக் கொள்ளலாம். நாம் பார்க்கிற வண்ணமாக **பூமி பனியைப் பெற்று குளிர்ச்சி பெற்றது.***

*''எரிமலை யுகத்தில் சமுத்திரங்கள் அளவற்ற தூய்மையாக்கப்பட்ட தாதுப் பொருட்களோடும், உலோகப் பொருட்களோடும் ஆகாயத்திறகு சென்றன. நாம் இந்த வாயுக்கள் வளைய அமைப்பில் உருவானது என்றும், பெரிய தவணைகளில் யுகங்களின் போது திரும்பி வந்தன என்றும், அவற்றில் சில மனிதனின் யுகம் வரைக்கும் அசைவாடிக் கொண்டிருந்தன என்றும் ஏற்றுக் கொண்டால் நாம் அறியாத மற்றும் இன்றைக்கு குழப்பமாக இருக்கும் அநேக காரியங்களை விளக்கலாம்.*

*''நான் மறுபடியும் 'கெனாபி தியரி' என்று அழைப்பதை இந்த 20 ஆம் நூற்றாண்டின் சிந்தனையாளர்கள் அவைகளைப் பார்த்துக் கொள்வார்கள் என்று நம்பிக்கையுடன் 1874 ல் இந்த கருத்துக்களை துண்டு பிரதியில் நான் வெளியிட்டேன்.*

*ஐசக் என். வைல்.''*





# சிருஷ்டிப்பின் வாரம்

*இந்த சிருஷ்டிப்பின் பொதுவான கருத்துக்களை நம் மனதில் வைத்து, நாம் ஆதியாகமத்திற்கு திரும்பி அதில் சொல்லப் பட்டுள்ளவைகளோடு, மேற்சொல்லப்பட்டுள்ள அனுமானங்களையும் ஒப்பிட்டு பார்க்க முயற்சிப்போம். முதலாவதாக சிருஷ்டிப்பின் வாரம் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம் : (1) இரண்டு நாட்கள் அல்லது யுகங்கள் (நமது கணக்கின்படி 2 × 7000 = 14000 வருஷங்கள்), மிருகங்கள் வாழ்விற்கு பூமியை ஆயத்தப்படுத்த பயன்படுத்தப் பட்டன. (2) அடுத்த இரண்டு நாட்கள் அல்லது யுகங்கள் (நமது கணக்கின்படி மேலும் 2 × 7000= 14000 வருஷங்கள்), தாவர வகைகளை உருவாக்கவும், கிளிஞ்சல் போன்ற சிறிய ஜீவராசிகளை உருவாக்கவும், சுண்ணாம்புக்கல், நிலக்கரி போன்ற மற்ற தாதுப் பொருட்களை அமைக்கவும் பயன்படுத்தப்பட்டன. (3) அடுத்த இரண்டு யுக நாட்கள் (நமது கணக்கின்படி 2 × 7000 = 14000 வருஷங்கள்), சமுத்திரத்திலும், பூமியிலும் நடமாடும் ஜீவ ஜந்துக்களை சிருஷ்டிப்பதற்கும், ''மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப் பட்டு'' பூமியின் ராஜாவாகவும், சிருஷ்டிகரின் பூமிக்குரிய சாயலிலும் சிருஷ்டிக்கப்படும் மனிதனுக்காக பூமியை ஆயத்தப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டன. (4) மனிதனுடைய சிருஷ்டிப்பு, கடைசி கிரியை ஆறாம் நாளின் அல்லது யுகத்தின் முடிவிலும் ஏழாம் நாளின் ஆரம்பத்திலும் வந்தது. வேதத்தில் எழுதப்பட்ட பிரகாரமாக ''தேவன்.... தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்.'' (ஆதி.2:2)*

## இரு உண்மையுள்ள சாட்சியங்கள்

பேராசிரியர் சில்லிமேன் அறிவிப்பதாவது:–

''கிரகத்தின் அமைப்பிலுள்ள ஒவ்வொரு பெரிய விசேஷ அம்சமும் புனித சரித்திரத்தில் சொல்லப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ஒழுங்கு முறைகளோடு ஒத்திருக்கிறது....இந்த சரித்திரம் (வேதாகமம்) தத்துவத்திற்கும், மதத்திற்கும் முக்கியமான குறிப்பைக் கொடுக்கிறது; கிரகத்திலேயே வேதாகமக் குறிப்பு உண்மையானது என்பதையும் பார்க்கிறோம்.''

பேராசிரியர் தானா ஆதியாகமத்தில் சிருஷ்டிப்பின் காரியங்களைக் குறித்து அறிவிப்பதாவது:

''இதன் தொடர்ச்சியாக விஞ்ஞானத்திலிருந்து எடுக்கப்பட்டதைப் போன்ற நிகழ்ச்சிகளின் ஒழுங்கை மாத்திரம் நாம் கவனிக்காதபடிக்கு அவருடைய ஏற்பாட்டில் ஒழுங்கும், யாரும் அடையமுடியாத தீர்க்கதரிசனமும் இருப்பதைக் காண்கிறோம். தத்துவம் எவ்வளவுதான் போதிக்கப்பட்டிருந்தாலும் இந்த தீர்க்கதரிசன ஞானத்தை அடைய முடியாது.''

மேலும் அவர் கூறுகிறதாவது:–

''இந்த நிகழ்ச்சிகளுக்கு எந்த ஒரு மனிதனும் சாட்சியாக இல்லை; அப்படிப்பட்ட அறிவு ஆதிகாலத்தில் இருந்ததில்லை. தெய்வீக ஞானம் கொடுக்கப்பட்டால் ஒழிய உலகத்தின் ஆதிகாலத்து மனிதனெவனும் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை வகுத்திருக்க முடியாது; அல்லது வெளிச்சத்தின் சிருஷ்டிப்புக்கு நீண்ட காலத்திற்குப் பிறகு, பூமிக்கு வெளிச்சத்தின் ஆதாரமாயிருக்கும் சூரியனின் சிருஷ்டிப்பின் திட்டத்தை நான்காவது நாளிலும் வைத்திருக்க முடியாது; தாவரங்கள் மற்றும் மிருக ஜீவன்களின் சிருஷ்டிப்புகளுக்கு இடையே இவை இரண்டிற்கும் சிறப்பான ஒன்று எது, எப்பொழுது அவைகளுக்கு அது முக்கியமானதாக இருக்கும் என்ற இந்த முழுத்திட்டத்திலும் உள்ள தத்துவத்தின் ஆழத்தை யாராலும் அடைந்திருக்க முடியாது.''

## முதலாவது சிருஷ்டிப்பின் யுக–நாள்

தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று. (ஆதி. 1:2,3)

வெளிச்சத்தின் தன்மையும், இயற்பியல் காரணமும் இன்னும் பரிபூரணமாக புரிந்துக் கொள்ளப்படவில்லை. வெளிச்சம் என்றால் என்ன என்ற கேள்விக்கான திருப்திகரமான விடை இன்னும் கிடைக்கவில்லை. இருந்தபோதிலும், இயற்கை முழுவதிற்கும் அது ஒரு முக்கிய தேவை என்று நாம் அறிகிறோம்; பயனற்றதும் வெறுமையுமாயிருந்த பூமியை மனிதனுக்கு ஆயத்தம் செய்வதற்கு தெய்வீக வல்லமை செயல்படும் வேளை வந்தபொழுது தெய்வீக முறைமையில் வெளிச்சம் முதலிடத்தில் இருப்பதை பார்க்க நாங்கள் ஆச்சரியப் படவில்லை. ''ஆழ்ந்த ஆலோசனை'' என்று குறிக்கப்படுகிற தெய்வீக வல்லமையின் தன்மை அநேகமாக வடக்கத்திய வெளிச்சம் அல்லது வடதுருவ விண்ணொளி போன்ற வெளிச்சங்களுக்கு மின்சாரசக்திகளும் ஒளி ஆற்றலைக் கொடுத்திருப்பதாக தோன்றுகிறது. அல்லது அநேகமாக, நீர் மற்றும் தாதுப்பொருட்களின் பெரிய வளையங்களில் சிலவற்றை, அந்த சக்தி கீழே கொண்டு வந்து இவ்வாறாக வெளிச்சத்தையும் இருளையும், பகலையும், இரவையும் பிரிக்கத்தக்கதாக ஆயிற்று. இருந்த போதிலும் பூமியை இன்னும் சுற்றியிருந்த பெரிய வளையங்கள் அல்லது பல மடிப்புள்ள வளையங்களினிமித்தம் நட்சத்திரங்களையும், சந்திரனையும், சூரியனையும் சிறிதளவும் கண்டுக்கொள்ள முடியவில்லை.

''சாயங்காலமும் விடியற்காலமும் ஆகி–முதலாம் நாளாயிற்று.'' தேவனுடைய நோக்கத்தை படிப்படியாக அதன் பூரணத்திற்கு செயல்படுத்த, எபிரேய சூரிய நாட்களில் இருப்பது போல இந்த யுக நாட்களிலும் சாயங்காலம் முதலில் வந்தது, மற்றொரு 7000 வருஷ நாள் மற்றொரு கிரியைக்காக ஒதுக்கப்படும்போது, அது சாதாரணமாக தொடங்கி பூரணத்திற்கு முன்னேறும். இந்தக் காலம் அல்லது ''நாள்'' விஞ்ஞான ரீதியாக Azoic அல்லது ஜீவராசிகளற்ற காலமாக வர்ணிக்கப்படுகிறது.

## இரண்டாவது சிருஷ்டிப்பின் யுக–நாள்

பின்பு தேவன் : ஜலத்தின் மத்தியில் (இடையில்) ''ஆகாயவிரிவு'' (பரந்தவெளி , வளிமண்டலம்) உண்டாகக்கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் சொன்னார். தேவன்....ஆகாயவிரிவுக்கு கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார்; தேவன் ஆகாயவிரிவுக்கு வானம் என்று பேரிட்டார்.(ஆதி 1:6–8)

இந்த இரண்டாவது 7000 வருஷங்களையுடைய யுக நாள் ஒரு

வளிமண்டலத்தை உண்டாக்க முழுவதுமாக பயன்படுத்தப்பட்டது. தேவனுடைய திட்டமிடுதல், முறைப்படுத்துதல், சிருஷ்டித்தல் ஆகியவற்றில் குறைவில்லாதிருந்த போதிலும், அது அவருடைய அற்புதமான கிரியைகளெல்லாம் இருப்பது போல அநேகமாக பூரணமான இயற்கையின் வழியில் உருவாக்கப்பட்டது. முதல் யுக நாளின் போது தண்ணீர் மற்றும் தாதுப்பொருட்களின் வளையம் விழுந்ததினால் பூமிக்கு வெளிச்சம் ஊடுருவி வர முடிந்தது. அந்த வெளிச்சம் நிறைந்த பூமியையும் வெப்பம் கொதித்து நீராவியை உண்டுபண்ணும் அதின் மேற்பரப்பு தண்ணீர்களையும் அடைந்து, பல்வேறு வாயுக்களை உண்டாக்குகிறது; அவைகள் எழும்பி பூமியை சுற்றிலும் மெத்தையை அல்லது ஆகாயவிரிவை அல்லது வளிமண்டலத்தை அமைத்து, எஞ்சியிருக்கும் வளையங்களின் தண்ணீர்களை பூமிக்கு அப்பால் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கும். இந்த 'நாள்' கூட இதுவரை வேதாகமம் காட்டிய வண்ணமாக, Azoic அல்லது ஜீவராசிகளற்ற காலத்திற்கு உரியதாகும்; ஆனால் புவி அமைப்பியல் இதை மறுக்கிறது; ஏனெனில் இந்த காலத்துப் பாறைகள் புழுவின் அடிச்சுவடு களையும், அதிக அளவில் சிறு கிளிஞ்சல்களின் எஞ்சிய பொருள்கள் பெரிய சுண்ணாம்புக்கல் அடுக்குகளில் இருக்கிறதையும் காட்டுகிறது. அவைகள் இந்த முதல் ஜீவராசிகளின் (Palaeozoic) காலத்தை–சிலுரியன் காலத்தை குறிக்கிறது. இது வேதத்தில் சொல்லப்பட்டவைகளோடு வேறுபடவில்லை. ஏனெனில் வேதம் இந்த மிகச் சிறிய ஜீவ ராசிகளை பெரிதாக எடுத்துக் கொள்ளாததினால் இவைகளைக் குறிப்பிடவில்லை.

சாயங்காலமும் விடியற்காலமும் ஆகி–இரண்டாம் நாள்– அதற்குள்ள தெய்வீக நோக்கத்தின் முழு செயல்பாடோடு அதாவது மேகங்கள், நீராவிகள் முதலானவற்றை மேற்பரப்பிலுள்ள ஜலத்தினின்று வளிமண்டலத்தால் பிரித்த செயலோடு முடிந்தது.

## மூன்றாவது சிருஷ்டிப்பின் யுக–நாள்

பின்பு தேவன்: வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் வெட்டாந்தரைக்குப் பூமியென்றும், சேர்ந்த ஜலத்திற்கு சமுத்திரம் என்றும் பெயரிட்டார்.இது நிறைவேறி தேவன் நல்லது என கண்ட பிறகு அவர்: பூமியானது



புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும் தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பிக்கக் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று.

புவி அமைப்பியல் இந்த வசனங்களை முழுமையாக உறுதி படுத்துகிறது. பூமியின் மேற்பாகம் குளிர்ந்தவுடன் ஜலத்தின் எடையானது அதை மேலும் கீழுமாக செய்ய முயற்சித்திருக்கும்; இதனால் சில பகுதிகள் அழுத்தப்பட்டு சமுத்திரங்களின் ஆழங்களாயின; மற்ற பகுதிகள் மேல் நோக்கி தள்ளப்பட்டு மலைத் தொடர்கள் ஆயின –ஆனால் திடீரென்று அல்ல, படிப்படியாக ஒன்றன் பின் ஒன்றாக ஆயின என்பதை இது நமக்கு காண்பிக்கிறது. இந்த எல்லா மாற்றங்களும் இந்த மூன்றாவது யுக நாளின் 7000 வருஷங்களில் தான் நடைபெற்றன என்று நாம் எடுத்துகொள்ளக் கூடாது. ஆனால் தாவரங்களின் சிருஷ்டிப்பின் ஆயத்தத்திற்கு தேவையான ஆரம்ப வேலைகளுக்கு அது சாட்சி பகர்ந்தது; இப்படிப்பட்ட சில பெரிய மாற்றங்கள் சமீப காலத்தில் தான் ஏற்பட்டன என்று புவி அமைப்பியல் சொல்வது சரியானதாகும். ஒரு நூற்றாண்டுக்குள் இந்த சக்தியைக் குறித்த சிறு உதாரணங்களை நாம் கண்டிருக்கிறோம்; மேலும் அடுத்த சில வருஷங்கள் இயற்கையின் திடீர் மாற்றங்களினால் ஏற்படும் துன்பங்களை நமக்கு தந்தாலும் நாம் ஆச்சரியப்பட மாட்டோம்; ஏனென்றால், நாம் இன்னொரு மாறுதலின் காலத்தில்– மாற்றப்பட்ட நிலைமைகள் தேவைப்படுகிற ஆயிர வருட யுக துவக்கத்தில் இருக்கிறோம்.

பெரிய மிருக ஜீவன்களுக்கு முன்னதாக தாவரங்கள் உண்டானது என்பதை புவி அமைப்பியல் ஒத்துக்கொள்கிறது; ஆரம்பக்காலத்தில் தாவரங்கள் புதர் போன்று அதிகமாக வளர்ந்தன என்பதையும் புவி அமைப்பியல் ஒத்துக்கொள்கிறது. வளி மண்டலம் கரியமில வாயுக்களாலும், நைட்ரஜன் வாயுக்களாலும் முழுவதும் நிறைந்திருந்தபடியால், பாசிகளும் பெரணி செடிகளும் கொடிகளும் அளவற்றதாகவும் இப்போது வளர்வதைவிட துரிதமாகவும் வளர்ந்தன. அப்போது அந்த வாயுக்கள் அவ்வளவு நிறைந்திருந்தபடியால் சுவாசிக்கிற மிருக ஜீவன்கள் அபிவிருத்தி அடைந்திருக்கமுடியாது. இப்போது பூமத்திய ரேகை பகுதியில் ஒரு சில அங்குலம் அல்லது ஒரு சில அடிகள் உயரத்திற்கு மட்டும் வளரும் செடிகள், அப்போது

நாற்பதிலிருந்து எண்பது அடி வளர்ச்சியைப் பெற்றிருந்ததுமல்லாமல் சில சமயங்களில் இரண்டு அல்லது மூன்று அடிகள் சுற்றளவு உள்ளதாகவும் இருந்தன. இவற்றை புராதன காலத்து மிருகம் அல்லது தாவரத்தின் எஞ்சிய பகுதிகள் நிரூபிக்கின்றன. அப்பொழுது இருந்த சூழ்நிலைகளில், அவைகளின் வளர்ச்சி அளவற்றதாகவும் வெகு வேகமாகவும் இருந்திருக்க வேண்டும்.

இந்தக் காலத்தில் நமது நிலக்கரி அடுக்குகள் உருவாக்கப்பட்டன என்று புவி அமைப்பியல் வல்லுநர்கள் கருதுகிறார்கள்: செடிகளும் பாசிகளும் கரியமில வாயுவை ஈர்க்கும் சக்தியை அதிகமாகக் கொண்டிருந்து, கரியை தங்களுக்குள்ளே சேகரித்து, நிலக்கரியை உருவாக்கியது; பின் வரும் யுக–நாட்களில் மிருகங்களின் ஜீவனத்திற்காக வளி மண்டலத்தை சுத்தம் செய்கையில் இவ்வாறாக இப்பொழுது நாம் காணும் நிலக்கரி அடுக்குகளை ஆயத்தப்படுத்தியது. பெரிய அலைகளினாலும், ஆகாய விரிவுக்கு மேலே உள்ள மற்ற தண்ணீர் வளையங்கள் இறங்கி வருவதினாலும், பூமியின் மேற்பரப்பில் உண்டான தொடர் ஏற்ற தாழ்வினாலும் இந்த மத்திய தாவரங்களின் பரந்த மிருதுவான நிலங்களும் பாசிகளின் அடுக்குகளும் மணல், களிமண் போன்றவைகளினால் மூடப்பட்டன. களிமண், மணல், சுண்ணாம்புக் கல் போன்றவைகளின் அநேக அடுக்குகளோடு இடையிடையே ஒன்றின் மேல் ஒன்றாக நிலக்கரி அடுக்குகளையும் நாம் காண்கிறோம். எனவே மேற்சொல்லப்பட்ட அதே செயல் மீண்டும் மீண்டும் அடிக்கடி நடந்திருக்கவேண்டும்.

சாயங்காலமும் விடியற்காலமும் ஆகி, மூன்றாவது 7000 வருஷ யுக – நாள் தெய்வீகத் திட்டத்தின்படி உலகத்தை ஆயத்தப்படுத்தும் அதன் பங்கை செய்து முடித்தது. நிலக்கரி, எண்ணெய் போன்றவைகள் படிந்ததினால் புவி அமைப்பியலில் அது நிலக்கரி உருவான காலம் (Corboniferous era) என்று அழைக்கப்படுகிறது.

## நான்காவது சிருஷ்டிப்பின் யுக–நாள்

பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாக்கத்தக்கதாக வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங் களையும் நாட்களையும் வருஷங்களையும்





குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார். அவைகள் பூமியின் மேல் பிரகாசிக்கும்படி வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்களாயிருக்கக் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன், பகலை ஆளப் (பகல் நேரத்தை குறிக்க) பெரிய சுடரும், இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார் (நியமித்தார்).

ஒரு யுக நாளின் செயல்பாடுகள் அடுத்த நாளுக்கு கொண்டு செல்லப்பட்டன. மேலும் நான்காவது யுக நாளில் சூரியன், சந்திரன், மற்றும் நட்சத்திரங்கள் காணப்படும் வரைக்கும், ஆகாய விரிவின் மேலிருக்கும் ஜலங்கள் வளையம் வளையமாக அதற்கு கீழிருக்கும் ஜலத்துக்கு வந்ததினால் முதல் நாளின் வெளிச்சம் அடுத்த இரண்டு நாட்களின் போது அதிகதிகமாக தெளிவானது என்று கருதுவது நியாயமானது. ஆனால் நோவாவின் கால ஜலப்பிரளயம் வரைக்கும்–கடைசி வளையம் வரைக்கும் இப்போது நாம் ஒரு பிரகாசமான நாளில் காண்பது போல அவ்வளவு தெளிவாக காணப்படவில்லை; ஆனால் இப்பொழுது பனிமூட்டமான நாள் அல்லது இரவின் போது நான் காணும் விதமாக கொஞ்சம் ஒளி புகும் தண்ணீர் திரையின் வழியே தெளிவாக பார்க்க முடியும். சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும் நீண்ட காலமாக பூமியின் வெளித்திரையின் மேல் பிரகாசித்துக் கொண்டிருந்தன; ஆனால் இந்த வெளிச்சம் தென்படும்படியான காலம் வந்தது. மேகங்களினிமித்தமாக சூரியன், சந்திரன், மற்றும் நட்சத்திரங்கள் காணப்படாமல் இருக்கும் போது நாம் காணும் சில மழைக் கால காலை நேரங்களைப் போல மந்தமான வெளிச்சத்தை முன்பு குறிக்கப்பட்ட நாட்கள் பெற்றிருந்தன; மனிதனும் மிருகங்களும் சிருஷ்டிக்கப்பட்ட போது அவர்களுக்கு பகலில் பூமி அதன் ஓட்டத்தின் மூலம் காலத்தைக் குறிக்கும்படியாகவும், இதற்கிடையில் சுவாசிக்கிற மிருகங்களுக்கு ஆயத்தம் பண்ணும்படியாக காற்றை, பிராண வாயுவாக்க ஆரம்பிக்கும் படியாகவும் மிகவும் தெளிவாக மாறுவதற்கான காலம் வந்தது. அதன் பின்னர், அதே 7000 வருஷ நாளில், அலைகளை கட்டுப்படுத்தவும், மனிதனின் வசதிக்காக இரவில் நேரத்தைக் குறிக்க தயாராக இருக்கவும் சந்திரனும், நட்சத்திரங்களும் கூட தோன்றின.

நான்காவது நாளின் போது தாவர வளர்ச்சியின் முன்னேற்றம் முடிந்து விட்டது என்று நாம் எண்ணலாகாது. ஆனால், மாறாக சூரியன், சந்திரனின் ஆதிக்கம் அதிகரித்து இன்னும் பல்வேறு வகையான புல் புதர்களையும், மரங்களையும் வளரச் செய்தபடியால் அது வளர்ச்சியை

அதிகரித்தது. புவி அமைப்பியல் இந்த காலத்தில் பூச்சிகள், நத்தைகள், நண்டுகள் போன்றவைகளின் வளர்ச்சிகளையும் காட்டுகிறது. மீன் முட்களும், செதில்களும் நிலக்கரியின் மெல்லிய படிவுகளிலும் கூடக் காணப்பட்டன. ஆனால் இது ஒழுங்கை பாதிக்கவில்லை. ஏனெனில் நிலக்கரி அடுக்குகள் உண்டாகுதல் மூன்றாவது நாளுக்குப் பிறகும் ஊர்வனவற்றின் காலத்திற்குள் இவ்வாறு தொடர்ந்தது தெளிவாகிறது. இந்த 'நாள்' புவி அமைப்பியல் குறிப்பிடும் ''ட்ரையாஸ்'' ( Trias ) காலத்துடன் மிக நெருக்கமாக ஒத்திருக்கிறது. சாயங்காலமும் விடியற்காலமும் ஆகி 7000 வருஷங்களைக் கொண்ட நான்காவது நாள் அல்லது பூமியை மனிதனுக்காக ஆயத்தப்படுத்துவதில் பெரும் முன்னேற்றத்தை சாட்சி பகரும் இந்த சிருஷ்டிப்பின் ஆரம்பத்திலிருந்து 28000 வருஷங்கள் முடிந்தன.

## ஐந்தாவது சிருஷ்டிப்பின் யுக–நாள்

*பின்பு தேவன்: நீந்தும் ஜீவஜந்துக்களையும், பூமியின்மேல் வானம் என்கிற ஆகாய விரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்றார். தேவன், மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர் வாழும் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவித பட்சிகளையும் சிருஷ்டித்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.*

பூமியின் குளிரடக்கமான சமுத்திரங்கள் ஜெல்லி மீனிலிருந்து திமிங்கிலம் வரைக்கும் உள்ள ஜீவஜந்துக்களால் எப்படி நிரம்பியிருந்தன என்பதை தற்காலத்தில் குளிரடக்கமான தென்கடல்களில் காணப்படும் அபரிமிதமான உயிரினங்களின் மூலம் தீர்மானிக்கலாம். நீரிலும் நிலத்திலும் வாழும் ஊரும் பிராணிகள் இந்த காலத்திற்கும் உரியதாகும். அந்த காலத்தின் போது, இப்போதிருக்கிற கண்டங்களும் தீவுகளும் ஒரு சமயம் கீழ்நோக்கி வந்த சிறிய அல்லது பெரிய ( நீர்) வளையங்களின் நீரினால் மூழ்கடிக்கப்பட்டும், மற்றொரு சமயம் இராட்சத அலைகளினால் கழுவப்பட்டும் படிப்படியாக உயர்ந்தும் தாழ்ந்தும் கொண்டிருந்தன. சிப்பிகளின் எஞ்சிய பொருட்கள் போன்றவை உயர்ந்த மலைகளில் காணப்படுவது அதிசயமல்ல. மேலும் உலகத்தின் அனைத்து பகுதிகளிலும் காணப்படும் ஏராளமான சுண்ணாம்புக்கல் அடுக்குகள் சில வேளைகளில் ''சிப்பி மீன் கல்லறைகள்'' என்று அழைக்கப்படுவது





ஆச்சரியமல்ல. ஏனென்றால் அவைகள் கிட்டத்தட்ட முற்றிலுமாக பெருந்திரளான மேலோடுகளால் நிறைந்திருந்தன. சொல்லமுடியாத கோடிக்கணக்கான சிறிய ஜீவஜந்துக்கள் பிறந்து அவைகளின் சிறிய மேலோடுகளை விட்டு ஒன்றன்பின் ஒன்றாக இறந்தவைகள் எவ்வளவு பெருந்திரளாக இருந்திருக்கவேண்டும்! தேவன் அவைகளை பலுகிப் பெருக வேண்டும் என்று ஆசீர்வதித்தார் என்று வாசிக்கிறோம். ஆம், இத்தனை சிறிய ஒரு ஜீவியாயிருப்பதும், ஒரு குறுகிய காலத்திற்குரியதா யிருப்பதும் ஓர் அனுக்கிரகம், ஓர் ஆசீர்வாதம்.

வேதத்தில் சொல்லப்பட்டவைகளுக்கு மேலாக நாம் விவாதம் செய்யாமல் இருப்போமாக. கணக்கிலடங்காத வகையில் மீன்களையும், ஊரும் பிராணிகளையும் தனித்தனியாகவும், வெவ்வேறாகவும் தேவன் சிருஷ்டித்தார் என்று வேதம் வலியுறுத்தவில்லை. ஆனால் அந்த தெய்வீக வல்லமை அல்லது ஆவி அடைகாக்குதலை மாத்திரம் செய்தது. தெய்வீக நோக்கத்தின் மூலமாக சமுத்திரம் பல்வேறு வகைகளான அதன் ஜீவஜந்துக்களைப் பிறப்பித்தது. செய் முறைகள் அறிவிக்கப்படவில்லை – ஒருவித இனங்கள் வித்தியாசமான நிலைமைகளில் இன்னொன்றாக உருவாகியிருக்கலாம் ; அல்லது அதே மூல ப்ரோட்டோபிளாசத்தி லிருந்து (ஜீவன்) ஜீவஜந்துக்களின் வித்தியாசமான முறைகள் வேறுபடும் நிலைமைகளில் உருவாகியிருக்கலாம்; ஒருவனும் அறியான்; மேலும் பிடிவாதமாக இருப்பது ஞானமற்றது. அந்தக் கடல்களின் அதிக தாதுப்பொருட்கள் நிறைந்த தண்ணீர்களின் இரசாயன செயல்பாடு மூலமாக(Palaeozoic) கொழகொழப்பான திரவத்தின் ப்ரோட்டோ–பிளாசம் கூட ஜீவியத்திற்கு வந்திருக்க முடியாது என்று தர்க்கம் செய்வது நமக்குரியதல்ல. நாங்கள் சொல்வது என்னவென்றால், எல்லாம் தெய்வீக நோக்கம் மற்றும் ஏற்பாட்டின் பலன்களாக வந்தன. எனவே எந்த வழிகளாயிருந்தாலும், எந்த ஏஜென்சிகளாயிருந்தாலும் அவைகள் தெய்வீக சிருஷ்டிப்புக்கள். ஆதியாகமத்தின் வார்த்தை களின்படி மாத்திரமல்ல இயற்கையின் உண்மைகள் மூலம் இது காட்டப்படுகிறது என்று நாங்கள் சொல்கிறோம். சமுத்திர ஜீவஜந்துக்கள் எப்படி உண்டாக்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொன்றும் இருக்கிறபடியே அதனதன் இனங்களும் மற்ற இனங்களாக மாறமுடியாதபடி உள்ள நிலைமைக்கு கொண்டு வரப்பட்டன. அவைகள் எப்படி பிறப்பிக்கப் பட்டாலும், இது தேவனுடைய கிரியையே. இந்த நாள் அல்லது யுகம் விஞ்ஞானியின் ஊரும் ஜந்துவின் காலத்திற்கு ஒத்திருக்கிறது. பூமியை

மனிதனுடைய குடியிருப்பாகவும் இராஜ்யமாகவும் ஒழுங்குபடுத்தும் வேலையின் துவக்கமுதல் 35,000 வருஷங்களாகி – சாயங்காலமும் விடியற்காலமும் ஆகி ஐந்தாம் நாள் ஆயிற்று.

## ஆறாவது சிருஷ்டிப்பின் யுக–நாள்

பின்பு தேவன்: பூமியானது ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும் காட்டு மிருகங்களையும், ஜாதி ஜாதியாக பிறப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று.தேவன் பூமியிலுள்ள ஜாதி ஜாதியான காட்டு மிருகங்களையும், ஜாதிஜாதியான நாட்டு மிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.

இந்தக் காலத்தில் பூமியின் மேற்பரப்பில் உள்ளவைகளெல்லாம் மிகவும் நிலையானதாகிக் கொண்டிருந்தன. பூமியின் மேற்பரப்பு மணல், களிமண், மேலோடுகள், நிலக்கரி, மற்றும் சேர்க்கப்பட்ட பலதரப்பட்ட தாது பொருட்களால் நூற்றுக்கணக்கான அடிகள் தடிப்பாக இருந்தது. அந்த தாதுப்பொருட்கள் சேர்க்கப்பட்டது எப்படியெனில், சில பூமியதிர்ச்சிகளினால் தூக்கியெறியப்பட்டு நொறுங்கின பாறைகளி லிருந்தும், சில பூமியை முன்பு சுற்றியிருந்த வளையங்களிலிருந்தும், சில மிருகங்கள் மற்றும் தாவரங்களின் குவியல்களிலிருந்தும் சேர்க்கப்பட்டன. அதோடுகூட அந்த 35,000 வருஷங்களின்போது பூமியும் கூட அதிகமாக குளிர்ந்திருக்க வேண்டும். மூன்று வகைகளாக பிரிக்கப்பட்ட சிறிய மிருகங்களுக்கு ஆயத்தமாக மலைத்தொடர்கள் மற்றும் பள்ளத்தாக்குகள் மூலம் தண்ணீர் நன்றாக வெளியேற்றப்பட்டு பூமியின் மேற்பரப்பு போதுமான அளவு சமுத்திரத்திற்கு மேலாக இருந்தது. இந்த மூன்று வகைகளாவன: (1) ஊர்வன, கொடிய சுவாசிக்கும் ஜீவஜந்துக்கள்– பல்லிகள், பாம்புகள் போன்றவை; (2) பூமியின் மிருகங்கள், அல்லது வீட்டு மிருகங்களிலிருந்து வித்தியாசப் படுத்தப்பட்ட காட்டு மிருகங்கள்; (3) கால்நடைகள் என்று குறிக்கப் பட்டு, விசேஷமாக மனிதனுக்கு துணையாக இருக்கும் வீட்டு மிருகங்கள். சிறிய கிளிஞ்சல்கள் போன்ற ஜீவராசிகள் மூலம் சமுத்திரத்திலிருந்து அதிகப்படியான ஹைட்ரோ–கார்பன்கள் உறிஞ்சப்பட்டு சுவாசிக்கிற கூட்டமாக வாழும் கடல் ஜீவராசிகளுக்கு ஆயத்தப்படுத்தியதைப் போல நிலக்கரி உருவான காலத்தில்





(Corboniferous era) பல வகையான தாவரங்களின் மூலம் சுவாசிக்கும் மிருக ஜீவன்களுக்கு காற்றிலுள்ள தேவையற்ற மூலகங்கள் நீக்கப்பட்டு காற்றும்கூட இந்த காலத்தில் சுத்தமாக்கப்பட்டிருக்கும்.

மீண்டும் நாம் பரிணாமக் கொள்கைக்காரரிடம் தேவையில்லாமல் இங்கு தர்க்கிக்க வேண்டியதில்லை. தேவன் விரும்பியிருந்தால், ஒன்றிலிருந்து மற்றொன்றை அபிவிருத்தி செய்து எல்லாவித வேறுபட்ட மிருக இனங்களை அவர் கொண்டு வந்திருக்க முடியும், அல்லது முதல் ஜீவாதார சத்துப்பொருளிலிருந்து (protozoan slime) தனித்தனியாக ஒவ்வொரு இனத்தையும் அவர் அபிவிருத்தி செய்திருக்கமுடியும் என்பதை ஒப்புக்கொள்வோம். அவர் எந்த முறையைக் கையாண்டார் என்று நாம் அறியோம். ஏனெனில் வேதத்திலும் வெளிப்படுத்தப் படவில்லை, பாறைகளிலும் வெளிப்படுத்தப்படவில்லை. இருந்த போதிலும் இந்த சிருஷ்டிப்பை நிறைவேற்ற தேவன் எந்த முறையை தெரிந்தெடுத் திருந்தாலும் ஜாதி ஜாதியான மிருக ஜீவன்கள் மாறாத வகையிலும், மனித அறிவின் சாமார்த்தியத்தால் அவைகளை மாற்ற முடியாத வகையிலும் அந்த மிருக இனங்கள் அவரால் நிர்ணயிக்கப் பட்டிருப்பது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவருடைய கரத்தின் கிரியைகள் ஞானமுள்ள சிருஷ்டிகரை உறுதிப்படுத்து கிறது.''இயற்கையோ'' அல்லது ''குருட்டு சக்தியோ'' சிருஷ்டிகராக இருந்திருக்குமேயானால் சில சமயங்களில் பரிணாமம் அடையவும் சில சமயங்களில் பழைய நிலைக்கு பின் நோக்கிச் செல்லவும் குருட்டுத் தனமாக கிரியை நடந்து கொண்டிருப்பதை நாம் இன்னும் கண்டிருப்போம்; நாம் இயற்கையில் நம்மை சுற்றியுள்ளவற்றை கவனிக்கும்போது, இனங்களின் மாறாத்தன்மையை நாம் காண முடியாது.

இது தேவன் மனிதனை சிருஷ்டித்த ஆறாவது யுக–நாளின் முடிவில் என நாம் யூகிக்கலாம். ஏனெனில் அவனுடைய சிருஷ்டிப்பு கடைசியாக இருந்தது. மேலும் ஆறாம் நாளில் அல்ல, ஆனால் ஏழாம் நாளில் தன் சிருஷ்டிப்பின் கிரியைகளை (மனிதன் ஆணும், பெண்ணுமாக இருவராக பிரிக்கப்பட்டதே தேவனுடைய கடைசி கிரியை) தேவன் முடித்தார் என்று குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்கு வோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும்

*சகலப்பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.*

எங்கள் கருத்துக்களின் கண்ணோட்டத்தில் மேற்சொல்லப் பட்டதிலிருந்து, தாவரங்கள், நீர் வாழ்வன மற்றும் நிலத்தில் வாழ்வன அவைகளின் வெவ்வேறு ஜாதிகளின்படியே ஏறக்குறைய அபிவிருத்தி யடைந்து, அல்லது பரிணாம வளர்ச்சியடைந்து இருப்பதற்கான சாத்தியக்கூற்றை வேதாகமம் மறுக்கவில்லை. இவைகளின் சிருஷ்டிப்பைக் குறித்தும் மனிதனுடைய சிருஷ்டிப்பைக் குறித்தும் வேதம் சொல்லும் முறைகளில் அதிக வித்தியாசம் இருப்பதை நாம் கூர்ந்து கவனிப்பது நல்லது. தெய்வீக சிருஷ்டிப்பின் வல்லமையின் நேரடி கிரியையாக மனித சிருஷ்டிப்பு இருப்பதாக குறிப்பாக சொல்லப் பட்டுள்ளது. ஆனால் மற்றவைகள் அப்படியல்ல, சரியாகச் சொல்லப்போனால் அபிவிருத்தியடைந்தது என உணர்த்துகிறது:–

*''பூமியானது புல்லையும்....முளைப்பித்தது.'' (ஆதி. 1:12)*

*''நீந்தும் ஜீவஜந்துக்களையும்....ஜநிப்பிக்கக்கடவது.'' (ஆதி. 1:20)*

*''பூமியானது ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும்.... பிறப்பிக்கக்கடவது.'' (ஆதி. 1:24)*

சிருஷ்டிப்பில் இரண்டு விவரங்கள் உள்ளன. ஒன்று, யுகநாளின் ஒழுங்கின் படியும், சுருக்கமாகவும் சொல்லப்பட்டுள்ளதை இப்பொழுது நாம் கவனித்துக் கொண்டிருப்பது. மற்றொன்று, ஆதி. 2 : 4–25 ல் சொல்லப்பட்டுள்ளவைகள். வேறுவிதத்தில் சொல்லப்போனால், தவறான இடத்தில் அதிகாரங்கள் (chapters) பிரிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு விபரங்களும் தனித்தனி அதிகாரங்களாக பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். இரண்டாவது விபரம் முதலாவது விபரத்தின் வர்ணணையும் விளக்கமுமாகும். எந்தவித தாவரமும் செடியும் இல்லாத ஒரு காலத்திலிருந்து, வானமும் பூமியும், அதன் சிருஷ்டிகளும் வளர்ச்சியடைந்த அல்லது ''சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு இவைகளே.''





முதலாவதும் முக்கியமானதுமான விவரம் சிருஷ்டிகரைப்பற்றி பேசும்போது ''தேவன்'' என்ற வார்த்தையைக் கொடுக்கிறது; இரண்டாவது அல்லது வியாக்கியான விவரம், அந்த நாளின் முழு கிரியைகளையும் யேகோவா தேவன் செய்தார் என்று சுட்டிக் காட்டுகிறது. முன்னமே கணக்கிடப்பட்ட ஆறு நாட்களின் கிரியைகளையும் சேர்த்து, இன்னும் ஒரு பெரிய யுக நாளாகிய அந்த நாளில் அவர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார்.

முதல் அதிகாரத்தில் உள்ள தேவன் என்ற வார்த்தை ஏலோஹிம் (**Elohim**) என்ற பொதுவான எபிரேயு வார்த்தையிலிருந்து வருகிறது. அது ஒரு பன்மைச்சொல், அதை தேவர்கள் (**Gods**) என்று மொழி பெயர்க்கப்படலாம், நாம் முன்னமே பார்த்திருக்கிற பிரகாரமாக அது வல்லமையுள்ளவர்கள் (**mighty ones**) என்பதைக் குறிக்கிறது. பிதாவினுடைய ''ஒரே பேறானவர்'' அவருடைய சிருஷ்டிப்பின் வேலையில் நிச்சயமாக அவருடைய தீவிர ஏஜெண்ட்டாக இருந்தார், மேலும் அதன் காரியங்களை செயல்படுத்துவதில் அவரோடே இணைந்திருக்கலாம். ஏலோஹிம் என்ற வார்த்தை வேதாகமத்தில் மற்ற இடங்களில் இருப்பது போல இங்கே தூதர்களின் சேனைக்கும் பொருத்தமாயிருக்கும். எனவே அவருடைய கனத்திற்குரிய பிரதிநிதிகளாகவும் கருவிகளாகவும் யார் உபயோகப்படுத்தப் பட்டிருந்தாலும், எல்லாருக்கும் பிதாவாகிய, யேகோவா தேவன் சிருஷ்டிகராய் இருந்தார் என்ற உண்மைக்கு இரண்டாவது அல்லது வியாக்கியான விவரம் நம்முடைய கவனத்தை ஈர்ப்பது சரியானதே. மனிதனின் சிருஷ்டிப்பைக் குறித்த இரண்டாவது விவரத்தில் அதிகமாகச் சொல்லப்பட்ட குறிப்புகளை இங்கே சரியாக கவனிக்கலாம். அது அறிவிக்கிறதாவது:–

*யேகோவா தேவன் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.*

அவருடைய எல்லா முந்தைய கிரியைகளிலும் ஒவ்வொரு சிருஷ்டியும் அற்பமாயிருந்தாலும் ஒன்றும் அவருக்கு சரியாக நன்றியை செலுத்தவும், பாராட்டவும், அவரைத் தெரிந்து கொள்ளவும் முடியாத போதிலும் தேவன் அவைகளில் மகிமைப்பட்டார். தெய்வீக நோக்கம் ஆதியிலிருந்தே இவைகள் எல்லாவற்றையும் முன்னறிந்து, பூமிக்குரிய அல்லது மிருக சிருஷ்டிப்பில் மிகச்சிறந்த சிருஷ்டிப்பாக

இருக்கவேண்டுமென்று கருதப்பட்ட மனிதனுக்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்தது. ''ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது'' என்று சமுத்திர ஜீவராசிகளுக்கு சொல்லப்பட்ட பிரகாரமாகவோ அல்லது ''பூமியானது.....பிறப்பிக்கடவது'' என்று பூமியின் மிருக ஜீவன்களுக்கு சொல்லப்பட்ட பிரகாரமாகவோ மனிதனுக்குச் சொல்லப்படவில்லை; மாறாக '' தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார்'' என்று பதிவு செய்யப்பட்டுள்ளபடி மனிதன், அவனுடைய சிருஷ்டிகரின் விசேஷ சிருஷ்டிப்பாக இருந்தான். ''ஏலோஹிம்மின்'' சாயலா அல்லது யேகோவாவின் சாயலா என்று புரிந்துகொள்ளப்படுவது காரியமல்ல, ஏனெனில் ''ஏலோஹிம்மாகிய'' ''தேவனுடைய புத்திரர்கள்'' அவருடைய சாயலாகிய சன்மார்க்க ஞானேந்திர அறிவுடையவர்களாக இருக்க வில்லையா?

இந்த ''ரூபம்'' என்பதை நாம் சரீர தோற்றம் என்று புரிந்து கொள்ளக் கூடாது. ஆனால் மாறாக, பூமிக்குரிய சுபாவத்திற்கும் தன்மைக்கும் ஏற்றாற்போல் தேவ ஆவியின் சாயலாகிய சன்மார்க்க ஞானேந்திரிய அறிவு என்று புரிந்து கொள்ள வேண்டும். ''சாயல்'' என்று சொல்லும்போது அது ஆளுகையை சந்தேகத்திற்கு இடமில்லாமல் குறிக்கிறது; அதாவது தேவன் இந்த அண்ட சராசரத்திற்கும் இராஜாவாக இருப்பதைப் போல மனிதனும் இந்த பூமிக்கும் அதில் நிறைந்திருக்கும் சிருஷ்டிகளுக்கும் இராஜாவாக இருக்க வேண்டியதைக் குறிக்கிறது. தேவனுடைய வார்த்தைக்கும் நவீன விஞ்ஞானத்திற்கும் ஒரு யுத்த களம் இருக்கிறது. முழு உலகமும், விசேஷமாக கற்றுத் தேர்ந்தவர்கள், வேத சாஸ்திர கல்விச்சாலை களிலுள்ள சிந்தனையாளர்கள், பிரசித்திப் பெற்ற பிரசங்க பீடங்களிலுள்ள ஊழியக்காரர்கள் அனைவரும் ''பரிணாமம்'' அன்று அழைக்கப்படுகிற நவீன விஞ்ஞான கடவுளை பணிந்து குனிந்து ஆராதனை செய்து கொண்டிருக்கிறார்கள். இரு கொள்கைகள் தற்போது முடிவெடுக்க வேண்டியவைகள்: பரிணாமக்கொள்கை உண்மையா யிருக்கும் என்றால், ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை வேதாகமம் பொய்யாயிருக்கும். நாம் எண்ணுகிறபடி வேதாகமம் உண்மை யென்றால் மனிதனைப் பற்றிய பரிணாமக் கொள்கையின் எல்லா கூற்றுகளும் முற்றிலும் பொய்யாகும்.

தேவனுடைய சாயலில் மனிதனின் சிருஷ்டிப்பைக் குறித்த ஆதியாகமத்தின் விவரம் மாத்திரம் இதை முடிவுசெய்யாமல் தேவ வார்த்தைகள் உறுதியாக அறிவிக்கிற பிரகாரமாக, வேதாகமத்தின்



எல்லா வார்த்தைகளும் ஆதியாகம பதிவை சார்ந்து ஆதரிக்கிறது. ஏனென்றால், பரிசுத்தமும், பூரணமும், வளர்ச்சியடைந்த மனோ நிலையும் உள்ளவனாக மனிதன் சிருஷ்டிக்கப்படாவிட்டால், நிச்சயமாக அவன் தேவனுடைய ஒரு ''சாயல்'' என்று அழைக்கப்பட முடியாது; ஏதேனில் நித்திய ஜீவனுக்கேதுவான அவனது தகுதியை பரீட்சித்து பார்க்க சோதனைக்குட்படுத்தியிருக்க முடியாது; விலக்கப்பட்ட கனியைப் புசித்ததினால் உண்டான அவனது கீழ்ப்படியாமை பாவமாக எண்ணப்பட்டு, மரண தண்டனை கொடுத்திருக்கவும் முடியாது; அந்த தண்டனையிலிருந்து அவனை மீட்கவேண்டிய அவசியமும் இருந்திருக்காது.

மேலும் இந்த முதல் மனிதனின் மீறுதலுக்கு ''மனிதனாகிய கிறிஸ்து இயேசு'' **மீட்கும் பொருளாக** (சரியான விலைக் கிரையமாக) இருந்தார் என்று அறிவிக்கப்படுகிறது. ஆகவே முதல் மனிதன் பாவம் செய்து தேவ தண்டனையான மரணத்திற்கு உட்படுத்தப்படுவதற்கு முன்பு இருந்தது போல அவரும் ஒரு நிழலாக அல்லது ஓர் உதாரணமாக கருதப்பட வேண்டும்.

கடந்த காலத்தில் இருந்தது போலவே இன்றைக்கும் அநேக உயர்ந்த மனிதர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் எல்லாரையும் பாவிகள் என்று தேவன் அறிவிக்கிறார் என்பது நாமறிந்ததே. ஆகவே அவர்கள் பாவ உணர்வுடன் கிறிஸ்துவின் புண்ணியத்தில் அண்டி, அவரது பாவ மன்னிப்பை பெற்றுக்கொண்டாலொழிய யேகோவா தேவனால் அங்கீகரிக்கப்படமாட்டார்கள் என்பதும் நமக்குத் தெரியும். தேவனுக்குள் வருகிற யாவரும் கிறிஸ்துவின் வஸ்திரத்திற்குள்ளாக அவருடைய கிருபையினால் மாத்திரமே இருக்கிறார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. இதனுடைய பலன் ஒரு **உயிர்த்தெழுதலாகவோ** அல்லது **திரும்பக்கொடுத்தலாகவோ** இருக்கவேண்டும் என்று நமக்கு அறிவிக்கப்படுகிறது. அந்த காலத்தில்தான் எவரும் சிருஷ்டிகருக்கு முன் தனிப்பட்ட முறையில் முழுவதும் திருப்திகரமாக இருக்க முடியும். ஆதாமுடைய மீறுதலுக்கு முன்பு அவனோடு உறவாடி அவனை குமாரன் என்று அழைத்த அதே சிருஷ்டிகர், அவருடைய பிள்ளைகளாகிய ஆதாமும், நாமும் பாவத்தினிமித்தம் குற்றப்படுத்தபட்டதினால் ''கோபாக்கினையின் பிள்ளைகளானோம்'' என்று அறிவிக்கிறார். ஆதாம் ''தேவனால் உண்டான போது'' அவனிடத்தில் பாவம் இல்லை. (லூக்.3:38)

எனவே, நிச்சயமாகவே ''உலக தோற்றமுதல் பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாரும்'' வரக்கூடிய ஆயிர வருட அரசாட்சிதான் **''திரும்பக் கொடுத்தலின் காலங்கள்''** என்று அறிவித்திருக் கிறார்கள். அதுபோலவே எல்லா பரிசுத்த தீர்க்கதரிசிகள் மூலமாக உரைக்கப்பட்ட தேவனுடைய வார்த்தைகளுக்கு பரிணாமக் கொள்கை நிச்சயமாகவே பயங்கரமான எதிரிடையாக இருக்கிறது. பரிணாமக் கொள்கை சரியென்றால், திரும்பக் கொடுத்தல் மனுக்குலத்திற்கு ஓர் ஆசீர்வாதமாக இருப்பதற்குப் பதிலாக சாபமாக இருக்கும். குருட்டு சக்தியினால் அல்லது பரிணாம செயல்பாட்டின்மூலம், மனிதன் கடின வழிமுறைகளினாலும், சிரமமான முயற்சிகளினாலும், ஜீவ அணுவி லிருந்து சிப்பிக்கும், சிப்பியிலிருந்து மீனுக்கும், மீனிலிருந்து ஊர்வனவிற்கும், ஊர்வனவிலிருந்து குரங்குக்கும், குரங்கிலிருந்து கீழ் நிலையிலுள்ள மனிதனுக்கும், கீழான மனிதனிலிருந்து நாம் இப்போது இருக்கும் நிலைக்கும் முன்னேறிக் கொண்டிருப்பானே யானால், ஆதாமை **முந்திய நிலைக்கு கொண்டுவர** தேவனின் பிரயாசங்கள் மனிதனுக்கு பயங்கரமாக ஊறு விளைவிப்பதாக இருக்கும். அல்லது ஒரு வேளை திருப்பிப் பெற்றுக் கொள்ளும் நிலையை பின் நோக்கி உந்தித் தள்ளி பழையபடி ஜீவ அணு நிலைக்கு கொண்டு செல்வதாக இருக்கும். இந்த வினாவில் மத்திய நிலை என்று ஒன்று இல்லை. தேவனுடைய ஜனங்கள் எவ்வளவு சீக்கிரம் தேவனுடைய வார்த்தைக்கு இசைய உறுதியான தீர்மானம் எடுக்கிறார்களோ அந்த அளவு அவர்களுக்கு அது நல்லதாயிருக்கும்; முடிந்தால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக தற்போது பரவிவருகிற ஈடுபலி இல்லை, பரிணாமம் போன்ற சில கருத்துகளில் நிச்சயமாக விழமாட்டார்கள். பரிணாம கொள்கையுடைய ஒவ்வொருவனும் பொய்யன் என்று அது நிரூபித்தபோதிலும் தேவன் நீதிபரராக இருப்பாராக. (ரோமர் 3:4)

ஆதாமின் அங்க அமைப்புகள் அல்லது சரீரம், அவனுடைய ஆவி அல்லது ஜீவசுவாசம் எல்லாம் எப்படி இணைந்து அவனை ஒரு ஜீவியாக அல்லது ஜீவாத்துமாவாக ஆக்கியது என்ற அவனுடைய சிருஷ்டிப்பைக் குறித்ததான விபரங்களுக்குள்ளாக இங்கு நாம் செல்ல இயலாது; இந்த விபரங்கள் இது சம்பந்தப்பட்ட இன்னொரு இடத்தில் ஏற்கனவே கொடுக்கப் பட்டுள்ளன. (தொகுதி 5, அத்தியாயம் 12)

சிலர் எண்ணுவது போல, அவர்களுடைய வருங்கால சந்ததியின் பலுகிப் பெருகுதல் எவ்விதத்திலும் மீறுதலோடு சம்பந்தப்பட்டிருக்க





வில்லை; ஆனால் அது திவ்ய ஆசீர்வாதத்தின் ஒரு பகுதியாக இருந்தது. வீழ்ச்சி, அதன் சாபம் அல்லது தண்டனை–இது சம்பந்தமாக ஏற்பட்ட ஒரே விளைவு, கூறப்பட்டபடி, மனிதனின் உழைப்புக்கும், நெற்றி வேர்வைக்கும் இணையாக தாயின் பிரசவ வேதனைகளிலும் துக்கங்களிலும் ஒரு அதிகரிப்பாகும். மனுக்குலமானது, மனதிலும் சரீரத்திலும் பெலகீனமடைந்து சீர்கெட்டிருப்பதினால் இவைகள் விகிதாசாரப்படி அளவிற்கு அதிகமான சுமையாக இருக்கிறது. போதுமான சந்ததியினர் பூமியை நிரப்பும் (மறுபடியும் பலுகிப் பெருகி அல்ல) அளவிற்கு பிறந்தவுடன் பலுகிப் பெருகுதலின் நோக்கம் நிறைவேறி யிருக்கும். உண்மைதான், ஏற்கனவே மனுக்குலம் ஒருமிகப் பெரிய எண்ணிக்கையில் பிறந்து– கிட்டதட்ட 5000 கோடி பேர்– மரணம் என்கிற மாபெரும் சிறைச்சாலையில் தற்போது உறங்குகின்றனர். ஆனால் இவைகள் ஒன்றும் அவ்வளவு பெரிதல்ல. இறுதியில் நிறைவேறப் போகிறபடி தற்கால பூமியின் மேற்பரப்பு எல்லாம் மனிதனுக்கு ஏற்றபடி மாற்றப்பட்டுவிட்டால் அவைகள் இந்த எண்ணிக்கையைக் காட்டிலும் இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகம் கொள்ளும், அதுவும் இப்போதிருக்கிற கண்டங்கள் கடந்த காலங்களில் இருந்தது போல இன்னும் வேறு கண்டங்கள் சமுத்திரங்களின் ஆழங்களிலிருந்து எழுப்பப் படக்கூடிய சாத்தியக்கூற்றை கணக்கில் எடுக்காமல் இருக்கும் போது அப்படி நடக்கும்.

சந்தேகத்தினால் பீடிக்கப்பட்ட மனதையுடைய விஞ்ஞானிகள் வெகு காலமாகவே, ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட காலத்திற்கு முன்பே மனிதன் பூமியிலிருந்தான் என்று நிரூபித்து காட்டுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். 'தேவனுடைய வார்த்தை, பொய் என்று காட்டிய மனிதன்' என்று விஞ்ஞானிக்கு உலகளாவிய புகழ்ச்சி வருவதற்காக கீழ்மட்டத்தில் களிமண் அல்லது சரளை கற்களில் கண்டெடுக்கப்பட்ட ஒவ்வொரு எலும்பும் ஆராய்ந்து பார்க்கப்படுகிறது. முந்திய காலத்தில் உள்ள சரளை கற்களின் மத்தியில் கண்டெடுக்கப்பட்ட அம்புகளின் தலைமுனைகள் இதற்கான நம்பத்தகுந்த சாட்சியங்கள் அல்ல என்று எற்கனவே குறிப்பிட்டுள்ளோம். (ஆதாமிற்கு முன்னதாக மனிதன் இருந்தான் என்கிறதும் இப்படியாக மனுக்குலத்தின் பல்வேறு வித்தியாசமான ஜாதிகளுக்கும் வழியுண்டாயிற்று என்று ஒருவாதம் இருப்பதைக் குறித்தும் நாங்கள் அறியாமலில்லை. ஆனால் நாங்கள் வேதாகமம் தேவனுடைய வெளிப்பாடு என்றும் ஆகவே எல்லா மனுஷீக யூகங்களுக்கும் மேம்பட்டது என்றும் உறுதியாக

இருக்கிறோம். ‘‘மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் தேவன் ஒரே **இரத்தத்தினாலே** தோன்றப்பண்ணினார்.’’ **(அப். 17:26)** மேலும், ‘‘**முந்தின மனுஷனாகிய ஆதாம்**’’ **(**1கொரி. **15:45,47)** என்று திட்டவட்டமாக ஏகோபித்து அது அறிக்கையிடுகிறது. மேலும் பேழையில் எட்டு ஜீவன்கள் மாத்திரம் காப்பாற்றப்பட்டன, அவர்கள் எல்லாரும் நோவாவின் பிள்ளைகள், ஆதாமின் வம்ச வழியினர் என்று ஜலப்பிரளய கதை துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது. சீதோஷ்ண நிலை, பழக்க வழக்கங்கள், உணவு போன்றவைகளைச் சார்ந்து வித்தியாசமான மனிதர்கள் அல்லது ஜாதியினர் உண்டாயினர் என்றும், விசேஷமாக, பலதரப்பட்ட ஜனங்கள் வித்தியாசமான இடங்களில் ஒருவரை விட்டு ஒருவர் ஒதுங்கி வாழ்ந்ததினிமித்தம் என்றும், அதினிமித்தம் அவர்கள் மத்தியில் விசேஷ குணங்கள் நிலையானது என்றும் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த உண்மை, ஐரோப்பியர்கள், இந்தியா அல்லது சீனாவிலுள்ள மக்கள் மத்தியில் வெகுகாலம் வசிக்கும் போது, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அவர்களுடைய அயலகத்தாரையொத்த சாயலைப் பெறுவதும், அந்த பிரதேசங்களில் பிறக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும், தாய்க்கு பிள்ளைகள் கருவில் இருக்கிற காலத்தில் சூழ்நிலைகளால் ஏற்படுகின்ற பாதிப்பின் நிமித்தம் இன்னும் அதிகமாக, தங்கள் தோலிலும் அங்க வடிவிலும் அயலகத்தாரின் சாயலைப் பெறுகிறார்கள் என்பதன் மூலம் தெளிவாக்கப் பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒற்றுமைக்கு ஆதாரமாக கிட்டத்தட்ட கி.பி. 70ம் வருடத்தில் யூத யுகத்தை முடிவுறச் செய்த உபத்திரவங்களினால் சிதறுண்ட இஸ்ரயேலர்களோடு ஒரு மாவட்டத்திலுள்ள சீனர்கள் தங்களை தன்மயமாக்கிக் கொண்டதற்கான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஜாதிகளுக்குள் திடமானவர்களான இந்த யூதர்கள் அடையாளம் கண்டு கொள்ள முடியாத அளவுக்கு சீனர்களைப்போன்றே ஆகிவிட்டனர்.**)** தகுந்த சிக்கிமுக்கி கற்களை கண்டு பிடித்த இடத்திற்கு அருகில் இந்த அம்புகளின் தலை நவீன இந்தியர்களின் வேலைப்பாடு என்பது சில காரியங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

சற்று காலத்திற்கு முன்பதாக **விக்டோரியா தத்துவ ஞான சாஸ்திர வித்யாசாலையில்** நடந்த ஒரு கூட்டத்தில் கீழ்கண்டவாறு அறிவிக்கப் பட்டது: ‘‘பேராசிரியர் ஸ்டோக்ஸ், எஃப். ஆர்.எஸ்., சர். ஜே.ஆர்.பென்னட் **(** Vice-Pres. R.S.**).**, பேராசிரியர் பீலே, எஃப். ஆர்.எஸ்., மற்றும் ஏனையோரும் இணைந்து பரிணாமத்தைப் பற்றிய வெவ்வேறான கொள்கைகளைக் குறித்து, ஒரு கவனமான கணிப்பு நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதில் தாழ்ந்த மிருகங்களிலிருந்து மனிதன் தோன்றினான் என்பதற்கு இதுவரை **விஞ்ஞான ரீதியிலான எந்தவித ஆதாரமும் இல்லை** என்றும்



சொல்லப்பட்டது. மேலும் பேராசிரியர் விர்ச்சோ, மனிதன் உண்டாக்கப்படுவதில் புராதன தன்மை போன்ற கீழ் நிலையும் முற்றிலுமாக காணப்படவில்லை என்றும் மிருக இராஜ்யத்துடன் இந்த விதமான தொடர்பு உண்டு என்பதை சரித்திர காலத்திற்கு முந்திய மனிதனின் பூர்வீகத்தைக் குறித்த ஆராய்ச்சியில் ஏற்பட்டிருக்கிற தீர்க்கமான முன்னேற்றம் அகற்றிவிட்டது என்றும் அறிக்கையிட்டார். மாபெரும் palaeontologist பேராசிரியர் பாராயுட், அவருடைய ஆராய்ச்சிகளில் ஒன்றிலும் கூட மண்ணுக்கடியில் புதையுண்டிருந்த புராதனங்கள் மேலும் இன்னொரு புராதன வர்க்கமாக மாறுவதைக் காணவில்லை என்று அறிக்கையிட்டு, மேற்கூறியவற்றை ஒத்துக் கொண்டார். சொல்லப்போனால், மனிதனுக்கும் வாலில்லா குரங்குக்கும் இடையிலும், மீனுக்கும் தவளைக்கும் இடையிலும், முதுகெலும்புள்ள மிருகங்களுக்கும் முதுகெலும்பில்லா மிருகங்களுக்கும் இடையிலும் உள்ள ஜீவராசியை இன்னமும் எந்த விஞ்ஞான மனிதனும் கண்டு பிடிக்கவில்லை என்று தோன்றுகிறது; மேலும் எந்த ஒரு இனமும் தங்களுக்கே உரித்தான குணாதிசயங்களை இழந்து, மற்ற இனங்களுக் குரியவைகளை பெற்றுக் கொள்வதற்கான ஆதாரமும் இல்லை என்றும் கூறினார். உதாரணமாக நாய் ஓநாயைப் போல் தோன்றினாலும் இரண்டுக்கும் இடையில் எந்த வித ஜீவராசியும் இல்லை; அழிந்து போன இனங்களின் நிலையும் இதுதான், ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு படிப்படியான மாற்றமும் கிடையாது. மேலும் பூமியிலிருந்த முதல் மிருகங்கள் எவ்விதத்திலும் தரக்குறைவானது அல்லது இழிவானது என்று எண்ணப்படக்கூடாது.’’

‘‘புவி அமைப்பியலும் சரித்திரமும் சந்திக்கும் இடம்’’ என்பதைக் குறித்து சர்.ஜே. டபிள்யு. டாசனின் **(**Sir J.W.Dawson LL.D.,F.R.S.,**)** சமீபத்திய கண்டுபிடிப்புகளின் திரட்டிலிருந்து சுருக்கமாக குறிப்பிடுகிறோம். அவர் கூறுகிறதாவது:–

‘‘மனிதனுக்கு முன்பாக இருந்த தாழ்ந்த மிருகங்களோடு அவனை சம்பந்தப்படுத்தும் மூலக்கருத்துக்கு தொடர்பு இல்லை என்று நாங்கள் கண்டறிந்தோம். எங்களுக்கு முன்பாக அவன் பிறவி குணங்களை உடைய மிருகங்களின் வாழ்க்கையோடு எந்த வித நேரடி தொடர்புமின்றி சிருஷ்டிப்பில் தனிப்பட்டவனாக தோன்றுகிறான். ஆதிமனிதர்கள் தங்கள் வம்சா வழியினரைக் காட்டிலும் குறைத்து மதிப்பிடத்தக்கவர்கள் அல்ல. இப்போதையவர்களைப் போல

அவர்களும் தங்கள் திறமைக்கேற்ப புதியவைகளை கண்டு பிடிப்பவர்களாக, புதுமையை புகுத்துபவர்களாக இருந்தார்கள். இன்னமும் எங்களால் மனிதனை அவனுடைய தீங்கற்ற, பழைய பொற்கால யுக(சொர்க்கம் போன்ற)வாழ்க்கைக்கு ஒத்து பார்க்க முடிய வில்லை. குகைகளிலும் சரளைக் கற்களிலும் அவனைக் காணும்போது அவன் ஏற்கனவே விழுந்து போனவனாக, அவனுடைய சூழ்நிலைக்கு எதிர்மாறாக உள்ளவனாக, அவனுடைய சக சிருஷ்டிப்புகளுக்கு சத்துருவாக, மாம்சம் புசிக்கும் காட்டு மிருகங்களுக்கு இயற்கை அளித்திருப்பதைக்காட்டிலும் அதி பயங்கரமான உபகரணங்களை அவைகளுக்கெதிராக கண்டுபிடிக்கிற வனாக இருக்கிறான்.... சொல்லப் போனால் மனிதன் அவனுடைய சரீரத்தைப் பொறுத்தவரையில் ஒரு மிருகம்; பூமியிலுள்ளவன்; பூமிக்குரிய தன்மையுடையவன்; அவன் முதுகெலும்புள்ள இனங்களிலும் பாலூட்டி இனங்களிலும் ஒரு அங்கத்தினனுமாக இருக்கிறான்; ஆனால் அந்த வகுப்பில் அவன் நேரடியான வகை அல்லது இனத்தை மாத்திரமல்ல, ஆனால் துல்லியமான ஒரு குடும்பத்தை அல்லது முறைமையை அமைக்கிறான்; வேறுவிதமாக சொல்வோமென்றால் அவனுடைய இனத்தில், குடும்பத்தில் அல்லது முறைமைகளில் அவன் மாத்திரம் தனித்தன்மையுடையவன். இவ்விதமாக அவனுக்கு அருகாமையிலுள்ள எல்லா மிருகங்களிலுமிருந்தும் அவன் மிகவும் தனித்திருக்கிறான். மேலும் தாழ்ந்த மிருகங்களைப் பொறுத்தவரையில் ஒரு இனத்திலிருந்து இன்னொன்று உண்டாயிற்று என்று இன்னமும் நிரூபிக்கப்படாத கோட்பாட்டை அனுமதித்தாலும் கூட, மனிதனை கீழ்நிலையிலுள்ள எப்படிப்பட்ட மிருகங்களோடும் இணைத்து காட்டுவதற்கான தொடர்பை எங்களால் காட்ட முடியவில்லை.... புவிஅமைப்பியல் காலத்தில் மனிதனின் சமீபத்திய வருகையைக் காட்டிலும் வேறு எந்த விஞ்ஞான ஆதாரமும் திட்டவட்டமாக நிலைநிறுத்தப் படவில்லை. முந்தைய புவி அமைப்பியல் காலங்களில் உள்ள அமைப்புகளில் மனிதன் இருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படாதது மாத்திரமல்ல, அவனுக்கு அருகிலுள்ள மிருகங்களும் இருந்ததற்கான ஆதாரங்களும் காணப்படவில்லை. மேலும் அந்த காலங்களின் நிலைமைகள் மனிதன் ஜீவிப்பதற்கு தகுதியற்றவை போல் காணப்படுகின்றன. வழக்கத்தில் உள்ள புவிஅமைப்பியல் முறையைப் பின்பற்றினால், பூமியின் முழு சரித்திரத்தையும் நான்கு பெரிய காலங்களாக பிரிக்கலாம். அதாவது, நமக்கு தெரிந்த பாறைகளின் காலத்திலிருந்து, தொடர்ந்து, பூமிக்கடியில் புதைந்து கிடந்த புராதன பொருட்களின் (eozoic), அல்லது அதற்கும் முந்தின பழைமையான காலத்திலிருந்து (archaean) நவீன காலம் வரைக்கும் பார்க்கும்போது நான்காவது காலத்தில், அதாவது நவீன காலத்தின் பிற்பகுதியில் மாத்திரமே மனிதனைக் குறித்த ஆதாரங்களை, அல்லது அவனுடைய வேலைகளை நாம் காண்கிறோம். குறிப்பாக சொல்லப்போனால் நவீன காலத்தின் ஆரம்ப காலத்திற்கு வரும்வரை மனிதன் இருந்ததற்கான மறுக்க முடியாத ஆதாரம் இல்லை....அநேக ஜாதிகளும் வகுப்பினரும் இருந்தாலும் மனிதனில் ஒரே ஒரு இனம் தான் உண்டு; இந்த ஜாதிகளும் வகுப்புகளும் அவர்கள் தங்களை முன்னேற்றிக் கொள்வதற்காக மிக ஆரம்பக் காலத்தில் ஏற்பட்டதாக காணப்படுகிறது; பிற்காலத்தில் அது அப்படியே குறிப்பிடத்தக்கபடி நிலைத்துவிட்டதாக தற்போதைய கண்டு பிடிப்புகள் காண்பிக்கின்றன...ஆதியாகமத்தின் சரித்திரம் நவீன சரித்திரத்தை எதிர்பார்த்திருந்தது. இந்த பழமையான புத்தகம் ஒவ்வொரு வழியிலும் நம்பிக்கைக்குரியது; இது புராணக்கதைகளுக்கும் பண்டைய புறச்சமய கதைகளுக்கும் மிகவும் அப்பாற்பட்டது.''



கிருமிகளைப் பற்றிய பெரிய அறிவியல் வல்லுநர் பேராசிரியர் பாஸ்சுர் (Prof. Pasteur) டார்வினின் கொள்கையை வெளிப்படையாக எதிர்ப்பவர். அவர் தன்னைப் பற்றி கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:–

''வருங்கால சந்ததியினர் ஒரு நாள் நவீன உலக தத்துவ ஞானிகளின் முட்டாள்தனத்தை பார்த்து சிரிப்பார்கள். எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக இயற்கையை நான் தெரிந்து கொள்ள கவனம் செலுத்துகிறேனோ அவ்வளவுக்கு அதிகமாக சிருஷ்டிகரின் கிரியைகளைப் பார்த்து ஆச்சரியப்படுகிறேன். என்னுடைய பரிசோதனைக் கூடத்தில் என்னுடைய வேலையில் ஈடுபட்டிருக்கும் போது நான் ஜெபிக்கிறேன்.''

விர்சே என்ற ரஷ்ய பண்டிதர், செயல் முறை கிறிஸ்தவரல்லாத வராக இருந்தாலும், இவ்வண்ணமாகவே உயிரற்ற பிராணிகளிலிருந்து (inorganic) உயிர்பிராணிகள் (organic) உண்டாயின என்ற டார்வினின் கோட்படுகளை எதிர்த்து பின்வருமாறு அறிக்கையிட்டார்:–

''மாறும் முறையினால் மிருகத்திலிருந்து மனிதன் வந்தான் என்று கூறும் எந்த முயற்சியும் முற்றிலும் தோல்வியில் முடிந்துள்ளது. இரண்டுக்கும் இடையிலுள்ள இணைப்பு (link) காணப்படவில்லை, காணப்படவும் முடியாது. மனிதன் வாலில்லாக் குரங்கிலிருந்து வரவில்லை. கடந்த ஐந்தாயிரம் ஆண்டுகளில் மனுக்குலத்தில் குறிப்பிடத்தகுந்த அளவிற்கு எந்த வித்தியாசமான மாறுதலும் ஏற்படவில்லை என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப் பட்டிருக்கிறது.''

இயற்கையைப்பற்றி ஆராய்கிற மற்றவர்களும் டார்வினின் கருத்துகளுக் கெதிராக தங்கள் குரலை எழுப்பி உள்ளார்கள்.

இந்த குறிப்புகளைப் பார்க்கும்போது ''காணாமல் போன இணைப்புகளை'' (missing links)பற்றி விவாதங்கள் மூலம் ஆராய்ச்சி

செய்கிறோம் என்று கற்பனை செய்கிற பண்டிதர்கள் அல்லது பேராசிரியர்களின் அவ்வப்போது வெளிவரும் கட்டுரைகளும் மனிதனின் கால்களிலுள்ள கட்டைவிரல்கள் உபயோகமற்றதாக ஆகிக்கொண்டு வருகின்றன என்றும் ''குரங்கின் வால்கள் எற்கனவே விழுந்துவிட்டது போன்று'' கட்டைவிரல்களும் வெகு விரைவில் ''இயற்கையாகவே விழுந்துவிடும்'' என்று உத்தேசமாக சொல்வதும் எவ்வளவு முட்டாள்தனமாக தோன்றுகிறது. நாலாயிரம் வருடங்களாக நன்கு பாதுகாக்கப்பட்ட பிணங்கள் (mummies) நம்மிடத்தில் இல்லையா? கிட்டதட்ட அதேமாதிரியான பழமையான முழு அளவு நிர்வாண சிலைகள் நம்மிடத்தில் இல்லையா? இவற்றில் எவைகளிலாவது வால்கள் காட்டப் பட்டுள்ளனவா? அவைகளின் கட்டை விரல்கள் இன்றைக்கு நம்முடையதைக் காட்டிலும் வித்தியாசமாக இருக்கின்றனவா? இயற்கையின் எல்லா போக்கும் கீழ்நோக்கி இல்லையா? தாவரங்களோடும் கீழான மிருகங்களோடும் உயர்ந்த மாதிரியைக் கடைப்பிடிப்பதற்கு மனிதனுடைய ஞானமும் உதவியும் தேவையில்லையா? இப்போது நாம் ''இருண்ட ஆப்பிரிக்காவில்'' காண்பது போன்ற மிகுந்த சீர்கேட்டை தடுத்து நிறுத்துவதற்கும் தேவனுடைய உதவி தேவையில்லையா? இவைகள் வேதத்தில் சொல்லப்பட்டவைகளோடு ஒத்துப்போகவில்லையா? (ரோம.1:21,24,28)

அப்.பவுல் மூலம் தீமோத்தேயுவுக்கு வழங்கப்பட்ட எச்சரிக்கையை தேவனுடைய ஜனங்கள் மனதில் வைத்துக்கொள்வது நல்லது. ''ஓ, தீமோத்தேயுவே .....சீர்கேடான வீண் பேச்சுகளுக்கும் ஞானமென்று பொய்யாய் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு.'' (1 தீமோ. 6:20) எந்த உண்மையையும் தெளிவாக பார்ப்பதற்கு நாம் தெய்வீக வெளிப்பாட்டின் நிலையிலிருந்து பார்க்க வேண்டும். நாம் ''அவருடைய வெளிச்சத்தில் வெளிச்சத்தைப் பார்க்க வேண்டும்.'' பின்பு வெளிப்புறத்தை, இயற்கை மூலம் இயற்கைக் கடவுளின் வழிநடத்துதலின்படி பார்க்கும் போது அதனால் உண்டாகும் விளைவு இருதயத்தையும் அறிவாற்றலையும் பெருகப்பண்ணுவதோடு, நம்முடைய சர்வ வல்ல சிருஷ்டிகரின் மகிமை, மாட்சிமை, வல்லமையை பரவலாக நொடிப்பொழுதில் காணும்போது வியப்பினாலும் தொழுகையினாலும் நம்மை நிரப்புகிறது.

சாயங்காலமும், விடியற்காலமுமாகி, ஆறாம் நாள் முடிவிலே, கிரியைஆரம்பித்து 42,000 வருடத்திற்கு பின்னர் பூமியானது மனிதனால் கீழ்ப்படுத்தப்பட ஆயத்தமாயிருந்தது– இருந்த போதிலும் முழுமையாக அவனுக்கு தகுதியற்றதாக இருந்தது. தேவன் தமது சிருஷ்டியின் கீழ்ப்படியாமையை முன்னரே அறிந்திருந்து (அவனுடைய தண்டனையான மரணம், அவனுடைய மீட்பு, தங்ளுடைய அனுபவத்தின் மூலம் செயல்படுத்தப்பட்ட, இறுதியாக பாவத்திலிருந்தும் மரணத்தி லிருந்தும் திரும்பி வருதல் என்பதைக் குறித்ததான அவருடைய முழு திட்டத்தை) பூமியெல்லாம் அவனுக்கு ஆயத்தமாகும் வரை மனிதனின் சிருஷ்டிப்புக்குக் காத்திராமல், சாதாரணமாக ஏதேனில் ஒரு தோட்டத்தை பரதீசாக ஆயத்தம் பண்ணினார். பரிபூரணமான ஜோடியின் சோதனைக்கென்று ஒவ்வொரு விதத்திலும் அதை பூரணப்படுத்தி, மனுக்குலம் குற்றம் சாட்டப்பட்ட தொழிலாளர் போன்று பூமியை கீழ்ப்படுத்தவும் அதன் மூலம் அதே வேளையில் விலையுயர்ந்த பாடங்களையும் அனுபவங்களையும் பெறுவதற்காகவும் விட்டுவைத்தார்.





# சிருஷ்டிப்பு வாரத்தின் ஏழாவது யுக நாள்

தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளை யெல்லாம் முடித்தபின்பு ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்.

மேல் நோக்கிப் பார்க்கும் போது, ஆறு நாட்களில் உண்டான முன்னேற்றம், மேலும், ஏழு என்ற எண், நிறைவுபெறுதலையும், பூரணத்தையும் குறிக்கும் என்பதை மனதில் வைத்துக்கொள்வதோடு, இயல்பாகவே ஏழாவது யுக நாள் அதன் முந்திய நாட்களைவிட மிகச் சிறந்ததாக இருக்கும் என்று எதிர்பார்ப்போம். அப்படியாகவே நாம் காண்கிறோம். அதின் முக்கியத்துவம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே – ''ஏற்ற காலம்'' வரைக்கும்– தேவன் தன்னுடைய கிரியைகள் எல்லாவற்றையும் முடித்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்ற பொதுவான அறிக்கையை புரிந்து கொள்ளும் திறமையுள்ள நமது மனக்கண்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேலையாள், ஒரு கட்டிடத்திற்கு என்று எல்லா பொருட்களையும் தயார்பண்ணி விட்டு, அவன் ஆரம்பத்தில் தீர்மானித்தபடி செய்துமுடிக்காமல், பின்னர் மேற்கொண்டு செயல்படுவதிலிருந்து நின்று விடுவது போன்று, சிருஷ்டிப்பின் வேலை ஆயத்தமாயிருக்கிறது என்ற நிலையில் அந்த வேலையை அவர் நிறுத்தி வைப்பது எவ்வளவு வினோதமானது!

அவருடைய திட்டங்கள் இன்னொரு முறையில் சிறப்பாக செயல்படுத்த முடியும் என்று அவருடைய ஞானத்தில் முன்னதாகவே கண்டறிந்திருந்ததினால், யேகோவா தேவன் தன்னுடைய சிருஷ்டிப்பின் வேலையை நிறுத்தினார், அதைத்தொடர்ந்து செய்யவில்லை என்று காணும் போது முழுவிஷயமும் நமக்கு முன்பாக அழகாக தெளிவாகிறது. தேவன், அவருடைய சிருஷ்டியான ஆதாமை, அவனுடைய சுயசித்தத்தை பயன்படுத்தவும், தூண்டுதலினால் பாவத்திற்குள்ளும், அதனால் வரும் நியாயமான தண்டனையான மரணத்திற்குள் விழவும், நீண்ட காலமான 6,000 வருஷங்கள் பொல்லாத சூழ்நிலையில் குற்றவாளியாக போராடவும், மரிக்கவும், அனுமதிப்பது நல்லது என்று கண்டார். பூமியை முன்பு சொல்லப்பட்ட பிரகாரம் முற்றுமாக பரதீசின் நிலைக்கு கொண்டு வருவது இப்படிப்பட்ட சூழ்நிலையில் மனிதனுக்கு பிரயோஜனமாய் இருக்கும்படிக்கு தேவன் அவனை ஒரு குற்றவாளியைப்போன்று பூமியைக் கீழ்ப்படுத்தும் வேலையில் ஒரு பகுதியை செய்ய அனுமதிப்பது நல்லது என்று கண்டார். மனிதன் தெய்வீக நீதிக்கு ஏதுவான முக்கியமான நியமங்களையும், அதிகமான பாவத்தினால் வரும் பாவ உணர்வையும் புரிந்து கொண்டு, இவ்விதமாக ஏற்ற காலத்தில் உலகத்திற்கு கொண்டுவரப்பட இருக்கிற கிருபைக்கு ஆயத்தமாய் இருப்பது நல்லது.

எப்படியாயினும், யேகோவா தேவன் சிருஷ்டிப்பின் வேலையை நிறுத்தியதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று, சந்தேகத்திற் கிடமின்றி, இன்னொருவரால்– அவருடைய ஒரே பேறானவரால் – அது குமாரனைமாத்திரம் மகிமைப்படுத்தாமல், பிதாவையும் கூட மகிமைப்படுத்தும் படியாக, வேறு எந்த வழி முறையும் செய்ய முடியாத முறையில் அவருடைய திவ்ய குணாதிசயங்களின் பூரணத்தைக் காட்டும்படி செய்து முடிக்கப்பட வேண்டும் என்பதாகும். இது அவருடைய குமாரனை மனிதனின் மீட்பராக இருக்கும்படி கொடுப்பதின் மூலம் ஆயிற்று. இது தெய்வீக நியமத்தை மாத்திரம் காட்டவில்லை, எவ்வழியிலும் அது ''பாவத்தின் சம்பளம் மரணம்'' என்ற பிரமாணத்தை மீறவில்லை என்பதையும், ஆனால் அதே நேரத்தில் விழுந்து போன சிருஷ்டிகளின் மேலே உள்ள இரக்கம், குமாரன் மனிதன் சார்பில் மரிக்கும் அளவுக்கான தெய்வீக அன்பை விளக்கிக் காட்டியது. இறுதியில் எல்லாம் நிறைவு பெறும்போது ஒழுங்கு முறைகளின் ஒவ்வொரு விசேஷ அம்சங்களிலும் தெய்வீக ஞானமும் வல்லமையும் கூட வெளிப்படுத்தப்படும்.





ஆயிர வருட அரசாட்சியின்போது, குமாரன் இந்த கிரியையை, திரும்பக் கொடுத்தல் முறைகளின் மூலம் செய்யக்கூடும் என்பதற்காக சிருஷ்டிப்பின் திட்டத்தை பூரணப்படுத்துவதினின்று பிதா நின்று விட்டார் என்று ஒரு வேளை கூறப்படலாம். அது முந்திய சிருஷ்டிப்பின் செயல்பாடுகளிலிருந்து வித்தியாசமா யிருக்காது, அவைகள் எல்லாம் பிதாவினுடையவைகள், குமாரன் மூலம் உண்டாயிற்று, உண்டான தொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. ஆனால் நாங்கள் இல்லை என்று பதில் அளிக்கிறோம். திரும்பக்கொடுத்தலோடு இந்த ஏழாவது யுக நாள் முற்றுப்பெற்று பூமியில் பூரணத்தை கொண்டு வரும். திரும்பக் கொடுத்தலின் வேலையோடு குமாரனுக்கு உள்ள உறவு, அவருடைய முந்திய கிரியைகள் எல்லாவற்றையும்விட முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். முந்திய சிருஷ்டிப்புக்கள் எல்லாவற்றிலும் குமாரன் தனக்கென்று வல்லமைகளையும், திறன்களையும் எந்த விதத்திலும் உபயோகப்படுத்தாமல் யேகோவா தேவனுக்காக சாதாரணமாக செயல்பட்டார். ஆனால் வரவிருக்கிற இந்த மாபெரும் கிரியையில், அவரது 34 வருட அவமானத்தின் உச்சநிலையாகிய சிலுவை மரணத்தின் மூலம் சம்பாதித்த அவருடைய சொந்த வல்லமையையும் அதிகாரத்தையும் உபயோகிப்பார். அவருக்கென்று பிதாவின் ஞானமும், அன்பும் திட்டமிட்டிருந்த அந்த நடவடிக்கையினால் அவர் உலகத்தை ''வாங்கினார்;'' ஆதாமையும், அவனுடைய சொத்தாகிய பூமியையும், ''தேவனுடைய சாயலில்'' படைக்கப்பட்டிருந்த பூமியின் சக்கரவர்த்தி என்ற அந்தஸ்தையும் வாங்கினார். பிதா ''முதற்பேறானவரை'' கனப்படுத்துவதில் களிகூர்ந்தார். குமாரன் அவரை கனப்படுத்தவும், அவரால் கனப்படுத்தப்படவும் இவ்விதமாக அவர் திட்டமிட்டு ஓய்ந்திருந்தார், அல்லது சிருஷ்டிப்பின் செயல் முறையை நிறுத்தினார்.

தேவன் ஓய்ந்திருந்தார் என்பது களைப்பிலிருந்து மீள்வதற்கு அல்ல, ஆனால் சிருஷ்டிப்பின் வேலையை நிறுத்தியிருந்தார். பாவத்தின்நிமித்தம் அவருடைய பூமியின் உயர்ந்த சிருஷ்டிப்புக்கு வந்த அழிவையும் வீழ்ச்சியையும் பார்த்தார், இருந்தபோதிலும் மரண தண்டனையின் பாதையை முடக்க எந்த வல்லமையையும் முன் வைக்கவில்லை. மேலும் பழைய நிலைக்கு கொண்டு வரும் (திரும்பக் கொடுத்தல்) செயல் முறையையும் ஆரம்பிக்கவில்லை. உண்மையிலேயே அவர் விதித்த பிரமாணத்தின்படி ஆதாமுக்கும் அவன் சந்ததியினருக்கும், ஈடுபலி கொடுப்பவர் மூலமாகவே அல்லாமல் அவருடைய தயவையும்

கருணையையும் அப்பியாசப்படுத்துவதற்கான எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் தவிர்த்தார். தண்டனை மரணமாக, அதுவும் எல்லையில்லாமல், நித்திய மரணமாக, நித்திய அழிவாக இருக்க, மேலும் பொய் சொல்வது தேவனுக்கு முடியாததாயிருக்க அண்டசராசரத்தின் பிரதான நியாயாதிபதிக்கு அவராலேயே கொடுக்கப்பட்ட நீதியுள்ள கட்டளையை மாற்ற முடியாமலிருக்க, இப்படியாக மனுக்குலத்தை நேரடியாக பழைய நிலைக்கு கொண்டு வர முடியாத சிருஷ்டிகராக ஆக்கப்பட்டார். அல்லது குற்றவாளியாக தீர்க்கப்பட்ட மனிதனில் அல்லது அவனது சொத்தான பூமியில், எவ்விதத்திலும் அவருடைய சிருஷ்டிப்பின் கிரியை தொடர முடியாமல் ஆயிற்று.

இப்படியாக யேகோவா தேவன் அவருடைய யுகங்களின் தேவ ஏற்பாட்டிலும் அதை நிறைவேற்றும்படியாக அவர் ஒப்படைத்திருந்த தன்னுடைய ஒரே பேரான குமாரனிலும் அவருடைய நம்பிக்கையை வெளிப்படுத்தினார். பிதாவானவர் குமாரனில் வைத்திருந்த இந்த நம்பிக்கையை, அப்போஸ்தலனாகிய பவுல் நம்முடைய விசுவாசம் அதைப்போன்று அபிஷேகம் பண்ணப்பட்டவரை உறுதியாக பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதையும், ஆகவே, நாமும் நம்முடைய, நமக்கன்பான நண்பர்களுடைய, பொதுவாக உலக மக்களுடைய ஒவ்வொரு அக்கறைக்காகவும், கவலைக்காகவும் அவரை நம்பலாம் என்பதையும் விளக்குவதற்காக உபயோகப்படுத்தியிருக்கிறார். அப்போஸ்தலருடைய அறிக்கை: ''விசுவாசித்த நாம் இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்..... அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன் தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்திருந்தது போல, தானும் தன்னுடைய கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்.'' விசுவாசிகள், தேவனைப் போன்றே, நமது ஓட்டத்திற்கு யேகோவா வைத்திருக்கிற எல்லா பெரிய திட்டங் களையும் நிறைவேற்றுவதற்கு, கிறிஸ்துவின் திறமையிலும் ஆர்வத்திலும், பூரண நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே இளைப்பாறுதலானது, சரீரபிரகாரமான களைப்பிலிருந்து அல்ல, ஆனால் கவலையிலிருந்தும், கிறிஸ்துவின் அதிகாரத்தை விட்டு விஷயங்களை வெளியே எடுக்கும்படியான எந்த ஆசையிலிருந்தும் அல்லது பலனை வேறு எந்த வழியிலாவது பெற்றுக்கொள்ளும்படியான முயற்சியிலிருந்தும் உண்டான களைப்பிலிருந்து இளைப்பாறுதலாகும்.



நம்முடைய சிருஷ்டிகரின் இளைப்பாறுதல் அல்லது விழுந்து போன அவருடைய சிருஷ்டிகளின் உதவிக்கு உடனடியாக வராமல் இருப்பது, அல்லது அசிரத்தைபோல் காணப்பட்டாலும், உண்மையில் அவ்விதமாக அல்ல, ஆனால் மனிதனின் உதவிக்காக, ஒரு மத்தியஸ்தர் மூலமாக உண்டாகும் ஞானமுள்ள, சிறந்த முறையின் வெளித் தோற்றமாகும். திரும்பக்கொடுத்தலின் வேலை சீக்கிரமாக தொடங்கப் பட்டிருக்க வேண்டும் என்று சொல்லப்படுமானால், பாவம், மரணத்தின் ஆட்சியின் காலமான 6000 வருடங்கள், ஒரு வம்சமானது ''பூமியை நிரப்புவதற்கு'' போதுமான எண்ணிக்கையில் பிறப்பின் மூலம் கொண்டு வருவதற்கு அப்படியொன்றும் அதிகமான காலம் கிடையாது என்றும் கூறுகிறோம்; ''அளவு மீறிய நிறைவான பாவம்,'' அதற்கான கடுமையான சம்பளத்தைக் குறித்தும் எல்லாருக்கும் ஒரு பாடத்தை புகட்டுவதற்கும், மனிதர்கள் தங்கள் சொந்த முன்னேற்றத்திற்காக தங்கள் சொந்த உபாயங்களை முயற்சித்து பார்க்க அனுமதிப்பதற்கும் அது பிரயோஜனமற்றது என்று அவர்கள் அறிந்து கொள்வதற்கும், அப்படியொன்றும் அது அதிகமான காலம் கிடையாது என்றும் நாங்கள் பதில் சொல்கிறோம். நம்முடைய ஆண்டவரின் முதலாவது வருகை உலகத்தை மீட்கும்படியாக (விலைக்கிரயம் கொடுத்து வாங்கும்படியாக) இருந்தபடியால், அவருடைய கிருபையை ஏற்றுக்கொள்பவர்கள் எல்லாரையும் மறுபடியும் வந்து ஆசீர்வதிக்கவும், உயர்த்தவும், பழைய நிலைக்கு கொண்டு வரவும், சரிசமமான நியாயமான உரிமை உள்ளவராக இருப்பார். பாவம் என்ற நோயும், மரணமும் உட்புகுந்து 6000 வருடங்களுக்கு மேலாக ஆகிவிட்டது. இருந்த போதிலும், அந்தக் காரியங்களெல்லாம் தேவனுடைய குறித்த காலத்தில் நிறைவேறும் என்று வேதாகமத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. ''குறித்த காலத்தில்'' தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார். உண்மையிலேயே ஆயிரவருட அரசாட்சியின்போது மீட்பரோடு சேர்ந்து உலகத்தை ஆசீர்வதிக்கும்படியான தெரிந்துகொள்ளப்பட்ட சபையை, அழைத்து, கூட்டிச்சேர்த்து, மெருகேற்றி, ஆயத்தம் பண்ணும் தெய்வீகத் திட்டத்திற்கேயன்றி, அந்த காலமானது அப்போது குறித்த காலமாக இருந்திருக்காது என்று நாம் காண்கிறோம். இந்த தெரிந்தெடுத்தலுக்கு முழு சுவிசேஷ யுகமும் தேவைப்படும் என்று தேவன் முன்னறிந்து, மீட்பின் வேலையை முடிக்கும்படியாக போதிய கால அளவிற்கு முன்னதாக தமது குமாரனை அனுப்பினார்.

# பூமி சம்பந்தப்பட்ட சிருஷ்டிப்பின் கிரியையிலிருந்து இளைப்பாறுதலின் காலம்

யேகோவா தேவன் தன்னுடைய சிருஷ்டிப்பின் வேலையிலிருந்து ஓய்ந்து அல்லது அதை நிறுத்தி எவ்வளவு காலமாயிற்று? அது இப்போது 6000 வருடங்களைக் காட்டிலும் சற்று கூடுதலாயிற்று என்று பதில் சொல்லுகிறோம். அவருடைய நிறுத்தம் அல்லது ஓய்வு எவ்வளவு காலத்திற்கு தொடரும்? அது ஆயிர வருட யுக முழுவதுமாக, மாபெரும் சிருஷ்டிகரின் ஆயிர வருட அரசாட்சியின் போதும், ''உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித்தீரும் காலங்கள் வருமளவும்'' (அப்.3:21) தொடரும் என்று நாங்கள் பதில் கூறுகிறோம். தன்னுடைய திட்டங்கள் நிறைவேற்றப்படுதலில் யேகோவா தேவன் வைத்திருந்த நம்பிக்கை இவ்வாறாக அவைகள் எல்லாவற்றையும் இயேசுவின் பொறுப்பில் விட்டது நியாயமானதே என்று நிரூபிக்கப்படுமா? முடிவு திருப்திகரமாக இருக்குமா? முடிவை ஆரம்பத்திலிருந்தே அறிந்திருந்த தேவன் அப்படியாகும் என்று நம்பிக்கை ஊட்டுகிறார்; மேலும் குமாரன் விலைக்கிரயம் செலுத்துவதினால் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இதனால் ''அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்'' (ஏசா.53:11) என்கிறார். ஆம், தங்களுடைய மீட்பரின் கிரியையில் விசுவாசத்தின் மூலம் நம்பிக்கைக் கொண்டிருக்கும் (கடந்த கால, வருங்கால) விசுவாசிகள் அனைவரும் ''தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவு மில்லை, காது கேட்கவுமில்லை அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை'' என்று விசுவாசத்தின் முழு நம்பிக்கை உடையவர்களாக இருக்கலாம். இது விசேஷமாக சபைக்கு, மாத்திரமல்ல ஆயிர வருட அரசாட்சியின் நாளன்று, அற்புதமான தெய்வீக நன்மைகளை, தெய்வீக நிபந்தனையில் மனதார ஏற்றுக் கொள்ளக்கூடிய, உலகத்தில் தெரிந்து கொள்ளப்படாமல் இருப்பவர்கள் எல்லாருக்கும் நீளம், அகலம், உயரம், ஆழம் நிறைந்த அன்பும் இரக்கமும் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களும் உண்டு என்று முழுமையாக விசுவாசிக்கலாம்.





ஆறாயிரம் வருடம் கடந்தாயிற்று, ஏழாவது ஆயிர வருடம் வர இருக்கிறது; இது யேகோவா தேவனின் ''இளைப்பாறுதல்;'' இது, வாஞ்சையும் கீழ்ப்படிதலும் உள்ள மனுக்குலத்திற்கு(புது சிருஷ்டிக்கு) திவ்விய சாயலை கொடுக்கும் திட்டமும், மனிதனுக்கு பூமியை அவனுடைய சொத்தாக, இராஜ்யமாக கீழ்ப்படுத்தும் திட்டமும் நிறைவடைந்து, குமாரனின் ஆயிரம் வருட அரசாட்சி முற்றுப்பெறும் காலத்திற்கு நம்மைக் கொண்டு செல்லும். அதன் பின்னர் மத்தியஸ்த சிங்காசனமும், ஆட்சியும், அவைகளின் நோக்கமும் நிறைவேற்றப் பட்டுவிடுவதால், பூமியிலுள்ள எல்லா சீர்கேடானவர்களும் அழிக்கப் பட்ட பின்னர், குமாரன் இராஜ்யத்தை எழுதியிருக்கிற பிரகாரம் ஆரம்பத்தில் யாருக்கென்று ஏற்படுத்தப்பட்டதோ அந்த மனுக்குலத்திற்கு கொடுத்து, ''தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ஒப்படைப்பார்.'' (1கொரி.15:24–28) ''அப்போது ராஜா அவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, (அங்கீகரிக்கப் பட்டவர்களே) உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள் (இம்மைக்குரிய சிருஷ்டி) என்று சொல்வார்.'' (மத்.25:34)

சரித்திரத்தினாலும் தீர்க்கதரிசனத்தினாலும் தெளிவாக குறிக்கப்பட்டுள்ள இந்த யுக நாளின் நீளம், சிருஷ்டிப்பின் வாரத்திலுள்ள மற்ற எல்லா யுக நாட்களின் நீளத்திற்கு தடயத்தைத் தருகிறது. முழுக்காலமான ஏழாயிரம் வருடங்கள் ஏழு என்ற எண்ணினால் பெருக்கப்பட்டு முற்றுப்பெறும்போது நாற்பத்தொன்பது ஆயிரம் வருடங்கள் கடந்து பெரிய ஐம்பதாவது ஆயிர வருடம் என்று அறிமுகமாகிறது. அதை ஏற்கனவே (தொகுதி 2, அத்தியாயம் 6) வேதாகமத்தில் முக்கியமானதாக தெய்வீக திட்டத்தின் மாபெரும் உன்னத நிலையை காட்டுவதாக பார்த்திருக்கிறோம். இஸ்ரயேலின் ஓய்வு நாட்கள் $7\times7=49$ க்கு சமம் என்று முடியும்போது, அது ஐம்பதாவது அல்லது பெந்தெகொஸ்தே என்ற அதன் விசுவாசத்தின் இளைப்பாறுதலுக்கு கொண்டு செல்கிறது. அவர்களுடைய ஏழேழு ஓய்வு வருடங்கள் $7\times7=49$க்கு சமமாகி, ஐம்பதாவது அல்லது யூபிலி வருஷத்தை அறிமுகப்படுத்துகிறது. இன்னும் சற்று விரிவாக $50\times50$ என்ற சுற்றுக்கள், ஆயிரம் வருட அரசாட்சியை பூமியின் மகா யூபிலியாக அறிமுகப் படுத்துகிறது. ஆகவே கடைசியாக, இப்போது, ஓய்வு நாள் அல்லது 7 நாள் முறை பூமியின் சிருஷ்டிப்பை இன்னும் சற்று விரிவான முறையில்

அதன் ஆரம்பத்திலிருந்து அதன் பூரண நிலை வரை, 7முறை 7000 வருடங்கள் 49000 வருடங்களுக்கு சமமாகி, இனி பெரு மூச்சு இல்லாத, அழுகை இல்லாத, மரணம் இல்லாத பெரிய யுகத்தை அறிமுகப்படுத்துகிறது. ஏனென்றால் பூமியை பொறுத்தவரையில் தேவனின் சிருஷ்டிப்பின் கிரியை அப்போது நிறைவடைந்திருக்கும். அந்த நாள் (தேதி) யூபிலி நாள் (தேதி) என்று குறிப்பிட வேண்டும் என்றால் ஆச்சரியப்படுவதிற்கில்லை.

பூமியின் சிருஷ்டிப்பின் வாரத்தின் விடியற்காலத்து வேளையில் தேவபுத்திரர் எல்லாரும் ''கெம்பீரித்தார்கள்'' (யோபு 38: 7). மேலும், படிப்படியான அபிவிருத்தியை பார்த்த பின்னர், கடைசியாக மனிதனை அதன் இராஜாவாக, தெய்வீக சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதை பார்த்தார்கள். அதன் பின்பு, தங்கள் ஆதி மேன்மையை காத்துக்கொள்ளாத விழுந்து போன தூதர்களின் பயங்கரமான அனுபவங்களாலும், பாவம் மரணத்தினிமித்தமாக மனிதனின் சுயநலமான மேலும் கொடூரமான சரித்திரத்தினாலும் கீழ்ப்படியாமையின் நிமித்தம் பாவத்திற்குள்ளும் மரணத்திற்குள்ளும் வீழ்ச்சி வந்தது. அதன் பின்பு அடுத்தடுத்து மீட்பும், பலியின் மூலமாக அபிஷேகம் பண்ணப்பட்டவரின் (தலையும் சரீரமும்) தெரிந்தெடுத்தலும், மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதலும், உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லா ருடைய வாக்கினாலும் உரைத்த இழந்து போனவைகளை திரும்பக்கொடுத்தலும் வந்தன. இவ்விதமாக யேகோவா தேவனின் ஞானம் நிறைந்த சிருஷ்டி களெல்லாம் அவரது அன்பின் நீளம், உயரம், அகலம், ஆழங்களை மாத்திரமல்ல, அவருடைய நீதி, ஞானம், வல்லமை ஆகியவற்றின் நீளம், உயரம், அகலம், ஆழங்களை நோக்கிப்பார்க்கும் போது வானத்திலும் பூமியிலும் ஒரு சந்தோஷ ஆரவாரம் உண்டாவதில் ஆச்சரியமில்லை.

அப்போது வானத்திலும் பூமியிலும் உள்ள தேவனின் எல்லா சிருஷ்டிகளினாலும் கீழ்க்கண்ட புதிய பாட்டு நிச்சயமாக பாடப்படும்.

''சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள் !

யுகங்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமு மானவைகள்!

கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப் படுத்தாமலும் இருக்கலாம் ?



ஏனென்றால் நீர் மாத்திரமே தயாளம் உள்ளவர்,

எல்லா ஜாதிகளும் உமக்கு முன்பாகத் தொழுது கொள்வார்கள்,

ஏனென்றால் உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின.'' (வெளி.15:3,4)

''வானங்களைச் சிருஷ்டித்துப் பூமியையும் வெறுமையாயிருக்க சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது; நானே கர்த்தர், வேறொருவர் இல்லை.''(ஏசா.45:18)

''அப்போது, வானத்திலும், பூமியிலும், பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும்...... சமுத்திரத்திலுள்ளவைகளும்.... சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற வருக்கும், ஆட்டு குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும், கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக் கேட்டேன்.'' (வெளி.5:13)

மேற்சொல்லப்பட்டதை எழுதிய பின்னர், நவம்பர் 12,1902 ல் சிருஷ்டிப்பைக் குறித்து ஆதியாகமத்தின் அறிக்கை என்று Prof. G.Frederic Wright, D.D.L.L.D., எழுதியதை நாம் கீழே தருகிறோம்.

## ஆதியாகமத்தின் அறிக்கை

''உலகத்தின் சிருஷ்டிப்பைக் குறித்ததான ஆதியாகமத்தின் முதலாவது அதிகாரம், மிகவும் குறிப்பிடத்தக்கதான ஒரு பத்திரமாகும். எழுத்தின் பிரகாரமாக பார்க்கையில், விஞ்ஞான கண்டு பிடிப்பின் பயனோடு ஒரு வேளை ஏற்படக்கூடிய முரண்பாட்டைத் தவிர்க்கும் அதன் திறமை சிறப்பானது. அது பெற்றிருந்த செல்வாக்கை அளவுகோல் வைத்து பார்க்கும் போது அதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்படியான அளவிற்கு வேறு எந்த விதத்திலும் எழுதப்பட்ட புத்தகம் ஒன்றும் கிடையாது. அதன் வெளிப்படையான நோக்கம் பல தெய்வ கொள்கையை தவிர்க்கவும், தேவத்துவத்தின் ஒருத்துவத்தை (ஒரே தேவன் என்பதை) உறுதியாக கூறவும் மாத்திரமே. பொதுவாகவும், விபரமாகவும் பல தெய்வ கொள்கையை மறுப்பதன் மூலமாகவும் வானத்தையும் பூமியையும் மாத்திரமல்ல, விக்கிரக ஆராதனைக்காரர்கள் வழக்கமாக ஆராதித்துக்கொண்டிருக்கிற அதில் காணப்படும் எல்லா வஸ்துக்களையும் உண்டாக்கினவர் இஸ்ரயேலின் தேவன் ஒருவரே என்றும் உறுதிப்படுத்துகிறது.

''அதன் செல்வாக்கு இல்லாத இடங்களிலெல்லாம் பல தெய்வ கொள்கையும் விக்கிரக ஆராதனையும் பழக்கத்திலிருப்பது இந்த அதிகாரத்தின் மேன்மையைக் காட்டுகிறது. இந்த அதிகாரத்தை ஓர் உண்மையான, தேவனுடைய வெளிப்பாடு என்று ஏற்றுக்கொண்ட ஜாதிகள் மாத்திரமே, ஒரே தேவன்,

அவருடைய ஆராதனை, எல்லாவற்றையும் அவர் ஒருவரே சிருஷ்டித்தார் என்று ஏற்றுக் கொள்கின்றன.

## விஞ்ஞானத்தோடு ஒத்திருத்தல்

‘‘அதே நேரத்தில் விஞ்ஞானத்தில் ஏற்பட்ட முன்னேற்றமானது இந்த கம்பீரமான தெய்வீக வெளிப்பாட்டின் புத்தகத்தின் அருமையான பகுதியைப் பற்றிய எங்களுடைய பிரமிப்பை அதிகப்படுத்தியிருக்கிறதே யொழிய குறைக்கவில்லை. அதன் விசாலமான உள்ளடக்கத்திற்குள் விஞ்ஞானத்தின் ஒவ்வொரு உண்மையான கண்டுபிடிப்பும் தஞ்சம் புக வாய்ப்புண்டு. இந்த அளவுக்கு குறிப்பிடத்தக்க விதத்தில் இந்த அதிகாரத்தின் மொழியானது, நவீன விஞ்ஞானத்தோடு முரண்பாட்டைத் தவிர்க்கும் வகையில் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளது. தெய்வீக ஏவுதலின்படியில்லாமல் வேறுவழிப்படி இல்லை என்று யேல் கல்லூரி (Yale college) யைச் சேர்ந்த பேராசிரியரும் புவிஅமைப்பியல் வல்லுநருமான Y.D.Dana அதிக முக்கியத்துவத்தோடு உறுதிப்படுத்தினார்.

‘‘ஆதியிலே வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்டன என்ற சிறிய அறிக்கையினால், பூமியின் வயதைக் குறித்தும், உண்மையிலே சூரியனோடு சம்பந்தப்பட்ட ஒழுங்குகளைக் குறித்தும் உள்ள வாக்குவாதத்தை எவ்வளவு காலத்திற்கு முன்பாக ஆதி (ஆரம்பம்) இருந்தது என்று சொல்லாமலே முடக்கிவிடுகிறது. சூரியனோடு சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறைகளுக்கு ஒரு ஆரம்பம் இருந்தது என்பது நவீன விஞ்ஞானத்தில் மிகவும் நிரூபிக்கப் பட்டிருப்பதால் தீவிர பரிணாமக் கொள்கைக் காரர்களும் எதிர்ப்பு தெரிவிக்கமுடியாது. சக்தியை சேமித்தலைக்குறித்த நவீன கொள்கை, இப்போது இருக்கிற முறைமைகள் இதற்குமுன்பு எப்போதும் இருந்ததில்லை என்பதை நிரூபிக்கிறது. சூரியன் குளிர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. அதன் வெப்பம் அதிவேகமாக கதிர்வீச்சடைந்து, தானே அதை வெற்றிடத்தில் வீணாக்கிக் கொண்டிருக்கிறது. சுருக்கமாக சொன்னால், சூரியன் சம்பந்தமான ஒழுங்குகள் குறைந்து கொண்டு வருவதுடன், இவ்விதமாக இந்த ஒழுங்குகள் என்றைக்கும் போய்க்கொண்டிருக்க முடியாது என்பது நண்பகலைப் போல் தெளிவாகிறது. தெளிவற்ற, ஆதாரமற்ற அனுமானம்கூட ஓர் ஆரம்பத்தைக் குறிக்கிறது. எக்காலத்திலும் மனிதனின் சாதுரியம் வேதாகமத்தின் ஆரம்ப வசனத்தில் காணப்படுகிற உண்மையைவிட மேலான அறிக்கையை உண்டாக்கவில்லை.

## சிருஷ்டிப்பு படிப்படியானது

‘‘ஆதியாகமத்தின் முதலாவது அதிகாரம் முழுவதும் இந்த முறையிலான சிருஷ்டிப்பில் முன்னேற்றம் என்ற கொள்கையின் அடிப்படையிலானது. பிரபஞ்சம் உடனே உண்டாகவில்லை; தொடக்கத்திலேயே அது முடிவுபெறவில்லை;



ஆரம்பத்தில் வெளிப்புற சக்திகள் மாத்திரம் நமக்கு இருந்தன, அவைகளிலிருந்து படிப்படியாக விரிகின்ற ஒரு பெரிய அமைப்பு உண்டாக்கப்பட வேண்டும். (ஏற்கனவே குறிப்பிட்டபடி மனிதனின் சிருஷ்டிப்பைக்குறித்து மாத்திரமே பரிணாமக்கொள்கை வேதாகமத்திற்கு முரண்பாடாக இருக்கிறது, அதுவும் இந்த குறிப்பை எதிர்க்கவே அந்த கொள்கை இருக்கிறது அல்லது அதை ஆதரிக்கிறவர்கள் இருக்கிறார்கள்). இப்படி ஒருவர் சொல்ல விருப்பப்பட்டால் அது பரிணாமக் கொள்கை. நாள் (எபிரேயு பாஷையில் `'yom") என்ற வார்த்தையைக்குறித்து ஒருவர் எப்படிப்பட்ட கருத்துடையவராயிருந்தாலும் இது சமமான உண்மையாக இருக்கிறது. இந்த உலகத்தை சிருஷ்டிப்பதற்கு, ஒரு நாள் 24 மணி நேர காலத்தையுடையதாயிருந்தாலும், 6 நாட்கள் சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகருக்கு ஏன் தேவைப்பட்டன? சிருஷ்டிகர் சர்வ வல்லமையுள்ளவர் மாத்திரமல்ல, அளவில்லாத ஞானம் உள்ளவர். சிருஷ்டிப்பில் ‘முதலாவது இலை, அதன்பின் தானியக்கதிர், பின்பு தானியக்கதிரில் முழுமையான தானியம்’ என்ற சிருஷ்டிப்பின் முறையை தெரிந்து கொண்டார் என்பதே இதற்கான பதில் ஆகும்.

‘‘இந்த முழு அதிகாரத்தின் முகப்பில் பரிணாமக்கொள்கையின் (ஏற்கனவே குறிப்பிட்டபடி மனிதனின் சிருஷ்டிப்பைக்குறித்து மாத்திரமே பரிணாமக் கொள்கை வேதாகமத்திற்கு முரண்பாடாக இருக்கிறது, அதுவும் இந்த குறிப்பை எதிர்க்கவே அந்த கொள்கை இருக்கிறது, அல்லது அதை ஆதரிக்கிறவர்கள் இருக்கிறார்கள்) தெய்வீக திட்டம் இருக்கிறதாக தோன்றுகிறது. மிகவும் சாதாரண உருவ வஸ்துகளை தோன்றச்செய்வதின் மூலம் சிருஷ்டிப்பு ஆரம்பிக்கப்பட்டு, வெளிச்சத்தை உருவாக்கும் சக்தியையும் திறனையும் கொண்ட செயல்பாடுகளை அவைகள் மேல் செயல்படுத்துவதன் மூலம் சிருஷ்டிப்பு தொடர்ந்து நடைபெறுகிறது. இதைத் தொடர்ந்து பூமியை உருவாக்குகிற மூலகங்கள் பிரிக்கப்படுகிறது. அதன் பிறகு தண்ணீரிலிருந்து நிலத்தைப் பிரிப்பதும், காற்றில் மிதந்து கொண்டிருக்கும் தண்ணீரிலிருந்து பூமியின் மேலுள்ள தண்ணீரைப் பிரிப்பதும் தொடர்கிறது. யாராவது ‘ஆகாய விரிவு’ என்ற வார்த்தையில் குற்றம் கண்டுபிடிக்க விரும்பினால், அதன் மேலோட்டமான சொல்லர்த்தத்தில் பிடிவாதமாக நின்றால் கீழே கொடுக்கப்படுகிற அறிக்கையின் பிரகாரம் அப்படி செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். (ஆதி.1:20) பறவைகள் பூமியின்மேல் திறந்த ஆகாய விரிவிலே பறக்கும்படியாக உண்டாக்கப் பட்டிருக்கின்றன. மேகத்தில் தண்ணீரை பிடித்து வைத்திருந்த ஊடகத்தின் மூலமாகத்தான் பறவைகள் பறக்க முடிந்தது.

## தாவரங்களின் சிருஷ்டிப்பு

‘‘மூன்றாவது நிலையில் நிலமானது தாவரங்களால் மூடப் பட்டிருந்தது, அதன் ஜீவன் எளிமையானது. ஆனால் ஒரு முறை உற்பவிக்கப்பட்ட பின்னர், தன்னோடுகூட தாவர விருத்தியை எடுத்துச்செல்லக் கூடியது. தாவர வர்க்கங்களின்

சிருஷ்டிப்பு அறிவிக்கப்பட்டிருக்கும் விதமானது அவ்வளவு அறிவை ஊட்டும் வகையில் அமைந்திருக்கிறபடியால் தானாகவே உற்பத்தி செய்து கொள்ளும் கொள்கைக்கு போதிய அளவு ஆதரவு உண்டு. ஏனெனில் உயிரியலில் இன்னும் விவாதத்துக்குரிய கேள்விகளில் இதுவும் ஒன்றாக இருக்கிறது. இதன் வெளிச்சத்தில் பார்க்கும் போது, 'தேவன் பூமியானது புல்லை முளைப்பிக்கடவது என்றார்...... பூமியானது புல்லை முளைப்பித்தது' என்ற வார்த்தை எவ்வளவு விசேஷமானதாக இருக்கிறது.

''நீந்தும் ஜீவஜந்துக்களை திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்று தேவன் சொன்னார் (ஆதி.1:20) என்று ஐந்தாம் நாளுக்குரிய கிரியையின் தொடர்ச்சியை அறிவிக்கும் முறையும் இவ்விதமாக குறிப்பிடத்தகுந்த விதத்தில் கூறப்பட்டிருப்பதை வாசிக்கிறோம். ஆறாம் நாளின் கிரியையை அறிவிக்கும்போது இதே சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. (ஆதி.1:24) 'பூமியானது.... ஜீவஜந்துக்களாகிய.... ஜாதிஜாதியாகப் பிறப்பிக்கடவது....' இப்படியாக கூறப்பட்டவைகளை ஒருவர் சொல்லர்த்தமாக மாத்திரமே அர்த்தப்படுத்த வேண்டும் என்று வற்புறுத்துவாரானால் அவர் விஞ்ஞானம் கூறுவதையோ அல்லது வேதசாஸ்திரத்தையோ ஏற்றுக்கொள்ள மாட்டார்.

## ஒரு விசேஷித்த சிருஷ்டிகர்

''மனிதனின் சிருஷ்டிப்புக்கு வரும்போது, இன்னொரு வித்தியாசமான அறிவிப்பு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. தேவன் மனுஷனை தம்முடைய சாயலாக சிருஷ்டித்தார், ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இத்தருணத்தில் மனிதனின் சிருஷ்டிப்பு எவ்விதமாக அமைந்திருந்தது என்று குறிப்பிடப்படுகிறது என்பதை ஆழ்ந்து சிந்திக்க அவசியமில்லை. ஆனால் மற்ற மிருகங்களின் சிருஷ்டிப்போடு ஒப்பிடும்போது, மனிதனுக்கு உரித்தான உயர்வான கௌரவத்திற்கு அறிவிக்கும்முறை சரியாக பொருந்துகிறது. மனிதனுடைய குறிப்பிடத்தகுந்த அநேக குணாதிசயங்கள், அவனுடைய ஆரம்பத்தின் செயல்பாடுகளைக் குறித்ததான அறிவிப்புகள் இதிலும் இன்னும் தொடர்ந்து வருபவைகளிலும் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படுகின்றன. மனிதன் தேவசாயலில் உருவாக்கப்பட்டது மாத்திரமல்லாமல், பூமியிலுள்ள மிருகங்களையும் ஆளுகை செய்யவும் தகுதியாக்கப்பட்டான். அவனுக்கு மொழியும் பரிசாக கிடைத்திருந்தது, அதன் மூலமாக அந்த மிருகங்களுக்கு அவனால் பெயரிடவும் முடியும். இதற்கும் மேலாக, சுய சித்தம் உள்ளவனாக, நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வித்தியாசத்தை அறிகிறான். சுருக்கமாக சொல்லும் போது, அவன் நல்நடத்தைக்குரிய தன்மையை அறிவதினால் அவன் தன்னை ஒரு தனி இடத்தில் வைத்துக்கொள்கிறான்.

''சிருஷ்டிப்பைக்குறித்து இவ்வளவு அதிகமான விஷயங்கள் நமக்கு சொல்லப் பட்டிருக்கிறது. இவற்றில் முட்டாள்தனமானவைகள், மிக





கற்பனையானவைகள் ஏதுமில்லை. மேலும் நவீன விஞ்ஞானத்தோடு ஒத்துப்போவதில் சிறிதளவே சிரமம் இருப்பதும், அது தெய்வீக ஏவுதலின்படியே வழங்கப்பட்டது என்பதற்கு தெளிவான ஆதாரமாக உள்ளது. மில்ட்டனும் கூட எல்லா கல்வி அறிவோடும் அவருக்கு முன்பாக இருக்கிற இந்த விஷயங்களின் அனுகூலத்தோடும் மிருக ராஜ்யம் சிருஷ்டிப்பைக் குறித்ததான அவருடைய முழு எண்ணத்தையும் பரிகாசம் பண்ணாத படிக்கு அவருடைய கற்பனையை போதுமான அளவிற்கு அவரால் தடுத்து நிறுத்தமுடியவில்லை. எழுப்புதலின் காமேயன்றி வேறு எது ஆதியாமத்தின் முதலாவது அதிகாரத்தின் ஆசிரியரை இப்படியாக தடை பண்ணி வழி நடத்தியிருக்கக்கூடும்?

## மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான், பரிணாமம் அடையவில்லை

''கீழான ஜீவராசிகளின் மூளையின் அளவிற்கும் அதன் விருத்திக்கும் மனிதனின் மூளையின் அளவிற்கும் அதன் விருத்திக்கும் மிகப்பெரிய வித்தியாசம் உண்டு. அவனுடைய வரிசையில், கீழ்மட்டத்தில் வந்தவைகளோடு மனிதன் இன்றும் அதிகமாக விசாலமாக, சரீரபிரகாரமாகவும் மனோதத்துவபிரகாரமாகவும் வித்தியாசமாக இருக்கிறான். அவனுக்கு இலக்கணத்தோடு பேசக்கூடிய திறமை உண்டு. அவனுடைய சிந்தனைகளை அவனால் வாக்கியங்களில் அமைக்க முடியும். அவைகளை தன் இஷ்டப்படி குறிப்புகள் மூலம் தாளின்மேல் அல்லது எந்த பொருளின் மீதும் அடையாளப்படுத்த முடியும். எந்த மிருகத்திற்கும் இல்லாதபடி மனிதனுக்கு இசைக்கு இசைந்து போகும் ஒரு காது உண்டு. இது மிகவும் அற்புதமான முறையில் கேட்கும் அங்கங்களை மென்மையான முறையில் சம்பந்தப்படுத்துகிறது. மிருக சிருஷ்டிப்பின் மனப்பக்குவத்திற்கு உள்ள பேதத்தை பார்க்கும்போது மனிதனின் மன இயல்புகளில் விஞ்ஞானபூர்வமான அல்லது விவாதித்து ஏற்றுக்கொள்ளும் தன்மை மிகவும் குறிப்பிடத்தக்கது.

''மனவளர்ச்சியின் பரிணாமம் என்பதை குறித்ததான Romanes என்பவரின் அருமையான வேலையில் அவர் தாழ்ந்த மிருகங்களில் மனிதனின் மனத்திறனின் எல்லா ஆரம்ப நிலைகளையும் பார்ப்பதாக எண்ணுகிறார். ஆனால் அவைகள் மிகவும் ஆரம்ப நிலையில் இருப்பதால், மனிதனுக்கும் மிருகத்திற்கும் இடையில் உள்ள இடைவெளி எப்பொழுதும் போல் மிக அதிகமாகவே உள்ளது. மிருகங்கள் வெளிப்படுத்தும் அறிவு எல்லாவற்றையும் சேர்த்து பார்க்கும் போது, அவைகளெல்லாம் 15 மாத வயதில் ஒரு குழந்தை செய்வதற்கு ஒத்த அறிவுக்கு ஏற்றதாக இருக்கிறது. ஆனால் இந்த அறிவு எந்த ஒரு தனிப்பட்ட இனத்திலும் இல்லை, ஒரு இனம் ஒரு வரிசையில் அந்த அளவுக்கு முன்னேறுகிறது, இன்னொன்று இன்னொரு வகையில்......

## விவேகமும் சுபாவமும்

''நாயின் மோப்ப சக்தி பாராட்டுக்குரியதாக இருந்தாலும் அதற்கு பூமி அமைப்பு சாஸ்திரம் கற்றுக் கொடுப்பதில் பிரயோஜனமில்லை. கழுகின் கூர்மையான பார்வை, அதற்கு வான சாஸ்திரம் படிக்க உபயோகப்படப் போவதில்லை. பனிக்கட்டி ஆற்றின் காலத்தின்போது உள்ள பனிப்படலத்தை படிக்கும்படியாக ஒருவர் ஒரு நாயை எடுத்துச்செல்வார் என்றால் அது பயனற்றதாயிருக்கும். ஏனென்றால் கனடா தேசத்தில் உள்ள பாறை பிளவுகளோடு அமெரிக்காவிலுள்ள பாறைகளை சம்பந்தப்படுத்தி பார்க்கக்கூடிய சிந்தனையின் ஆற்றல் கிடையாது. அல்லது, ரஷ்யாவின் சமவெளியிலுள்ள சிராய்க்கப்பட்ட கற்களை ஸ்காண்டிநேவியா மலைத்தொடரோடும் ஒத்துபார்க்க முடியாது. இந்த கற்கள் கடந்து செல்லுகிற பனியினால் பாறை பிளவுகளிலிருந்து பலவந்தமாய் பிடுங்கி எடுக்கப்பட்டவைகளாகும். இப்படியான அனுமானம் நாய்க்குலத்தின் சக்திக்கு முற்றிலும் அப்பாற்பட்டது.

## மதத்தை கிரகிக்கும் சக்தி

''இலக்கியம் மூலமாக மதத்தின் கருத்துக்களை கிரகிக்கும் சக்தி மனுக்குலத்திற்கு இருக்கிறது. இந்த மனித மனதின் மேன்மை வேறொன்றிலும் இல்லை. சில சாதாரண வார்த்தைகளின் உச்சரிப்பை காட்டுவதற்கு என பயிற்றுவிக்கப்பட்ட பன்றிகள் ஒருசில எழுத்துக்களை தெரிந்தெடுக்க, சில முறையில் கற்பிக்கப்பட்டு ஒரு வகையில் அவற்றை செய்துகாட்டும் பொருட்காட்சிகள் நடைபெறுவது உண்மையிலேயே அற்புதமானதுதான். ஆனால் எந்த மிருகத்திற்கும் தெளிவாக பேச கற்றுக்கொடுக்க முடியாது. இப்படி சொல்லும் போது பச்சைக் கிளிகளும் விதிவிலக்கல்ல. ஏனென்றால் அதன் வார்த்தைகள் அதற்கே தெளிவில்லாத சில சப்தங்களைத்தான் அது திருப்பி செய்கிறது. போகட்டும், ஒரு மிருகத்திற்கு கூட வாசிக்கவோ, புத்திசாலிதனமாக ஒரு சொற்பொழிவையோ, அல்லது செய்தியையோ கேட்கும்படி கற்றுக் கொடுக்க முடியாது.

''இன்னொரு பக்கம், வேதாகமம், பல்வேறான இலக்கியங்களை கொண்ட புத்தகமாகும். அது எக்காலத்திலும் எழுதப்பட்டிராத அளவுக்கு மேன்மையான காவிய நடையும், சொல்வன்மையும் உள்ளதாக தேவனின் கம்பீரமான எண்ணங்களையும் இதற்கு முன்பு எப்போதும் சொல்லப் பட்டிராத வருங்கால வாழ்க்கையைக் குறித்தும் சொல்வதாக இருக்கிறது. அது வானத்திற்கு கீழே உள்ள அனேக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மேலும் அந்த மொழியில் அதன் கருத்துக்களை வலிமையாக எடுத்துரைக்கவும் சரியான மொழி நடையையும் பெற்றுள்ளது. உயர்ந்த அறிவுள்ள மனதுடன் பார்க்கும்போது மிருக சிருஷ்டிப்பில்



மனிதனின் தனித்தன்மை நன்றாகவே தெரிகிறது. அறிவாற்றலில் அவன் தனித்து நிற்கிறான். மனித இனத்திற்கு விஞ்ஞானப் பெயர் 'homo' ஆகும். ஆனால் இந்த இனத்திற்கு 'homo sapiens' அதாவது மனித ஞானம் இணையப்பெற்ற மனித வடிவம்.....

''ஆல்ஃபிரெட் ரசல் வாலேஸ் (Alfred Russell Wallace) என்பவர் இயற்கையாகவே தெரிந்தெடுக்கும் கொள்கையை தானாகவே கண்டுபிடித்து டார்வின் பிரசுரித்த அதே நேரத்தில் தானும் பிரசுரித்தபோது, மனிதனின் பல தரப்பட்ட சரீர வினோதங்கள் தானாகவே ஏற்பட்டிருக்க முடியாது என்றும், அவைகள் மறுப்பு சொல்ல முடியாத அளவுக்கு, மிகவும் உயர்ந்த வல்லமையின் மூலமாகத்தான் வந்திருக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டினார்.

## ஆடைகளும் கருவிகளும்

''அவைகளில் மனிதனுக்கு இயற்கையிலே பாதுகாப்பான மூடுதல் இல்லாதிருப்பதை சுட்டிக் காட்டுகிறார். எல்லா மிருகங்களுக்குள்ளும் மனிதனுக்கு மாத்திரமே ஆடைகளை அளிக்கிறார். அவன் தாவரங்களின் நார் கொண்டு கம்பளியை (போர்வையை) நெய்து, அல்லது மற்ற மிருகங்களுடைய தோலை எடுத்து, கடுமையான சீதோஷ்ணத்திலிருந்து தன்னை காப்பதற்காக தன்னுடைய நிர்வாணமான பகுதியில் போட்டுக் கொள்ள அவற்றை உபயோகப்படுத்துகிறான். பறவைகளுக்கு சிறகுகள் உண்டு, ஆடுகளுக்கு ரோமம் உண்டு, மற்ற மிருகங்களுக்கு தங்கள் பாதுகாப்புக்கென வியக்கத்தக்க வகையில் அவைகளுக்கு ஏற்றது போல மெல்லிய உரோமங்களுண்டு. மனிதன் மாத்திரம் தன்னுடைய சொந்த அறிவை உபயோகிக்காத வரையில் பாதுகாப்பு இல்லாதவனா யிருக்கிறான். அதைக்குறித்து சிந்திக்க நாம் நிற்கும் வரை தனக்கு ஆடைகளைத் தேடிக்கொள்வதற்கான எவ்வளவு அதிகமான மனிதனின் அறிவு உபேயாகப் படுத்தப்படுகிறது என்பதை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. தனக்கு ஒரு அலங்கார அங்கியை பெறுவதற்காக ஒரு மிருகத்தின் தோலை எடுக்க வேண்டும் என்ற சிறு விஷயத்தில் கூட, முதலாவதாக கருவிகளை கண்டுபிடிக்கிறவனாக இருக்கும்படி உந்தப்படுகிறான். ஏதோ ஒரு கத்தி உபயோகப்படுத்தப்படாமல் எந்த மிருகமும் இன்னும் தோலுரிக்கப்பட்டதில்லை.

''இது மனிதனைக் குறித்து கருவிகளைப் பயன்படுத்துகிற மிருகம் என்ற நல்ல வரையறையைத் தருகிறது. மிருகங்கள் கருவிகளைப் பயன் படுத்துகின்றன என்று சொல்லக்கூடிய வகையில் பார்ப்போமானால், யானையிலும் குரங்கிலும் அந்த யுக்தி காணப் படுகிறது. யானை தன்னுடைய உடலில் தனக்கு எட்டாத பகுதியில் உள்ள ஏதாவது பொருட்களை அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்காக ஒரு தூரிகை போன்றதை எடுத்து தன்னுடைய தும்பிக்கையின் மூலம் அது அந்த பகுதியை அடையச் செய்கிறது. ஒரு குரங்கு ஒரு குச்சியை உபயோகித்து ஒரு

கதவை திறக்க துருவிப்பார்ப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் எந்த மிருகமும் எப்போதாவது ஒரு கருவியை உருவாக்கினதாக அறியப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் எந்த மனித ஜாதியும், எவ்வளவு குறைவான அறிவுள்ளவர்களாக இருந்தாலும், விநோதமான, சிக்கலான கருவிகளை உண்டு பண்ணாமல் இருந்ததில்லை.

''எளிமையான முறையில் நடத்தப்படும் போட்டிகளுக்கான படகுகளும் கூட அதிக புத்திசாலித்தனமாக உண்டாக்கப்பட்டு, தங்கள் தேவைக்கேற்றப்படி பயன்படுத்தப்படுகின்றன. நெருப்பூட்டும் உபகரணமான கல்லும் அதிகமான, முன்னதாக தீர்மானிக்கப்பட்ட வடிவத்தை பெறுவதற்கும் அதை ஏற்றவாறு செதுக்க அதிகமான திறமை தேவைப்படுகிறது. உராய்வு மூலம் நினைத்தவுடன் நெருப்பை உண்டாக்க நாகரீகமற்ற ஜாதிகள் உபயோகித்த புத்திசாலித்தனமான முறைகள், நாகரீகமுள்ள மனிதனுக்கு நன்மை செய்யும்; அம்பும் வில்லும், அவைகளை உபயோகப்படுத்தின விதமும், மிகவும் மேலான கண்டு பிடிப்பு முறையை காட்டுகிறது. மிருக சிருஷ்டிப்பு, இதோடுகூட ஒப்பிட்டு பார்ப்பதற்கு கொஞ்சம் கூட தகுதியற்றதாக இருக்கிறது.

## சங்கீதத்தை கிரகிக்கும் தன்மை

''மேலும் வாலேஸ் என்பவர், மனிதக் குரலானது, இயற்கையாக உண்டாக்கப்படக் கூடியவைகள் எல்லாவற்றையும் காட்டிலும் மேலானது என்பதை நிரூபிக்கிறார். குரங்குகளுக்கு தங்கள் ஆத்மாவில் சங்கீதம் கிடையாது என்பதுடன் தங்கள் குரல்வளையில் அதற்கேற்ற தன்மையும் கிடையாது. ஆனால் மனுக்குலத்தில் அடிமட்டத்திலுள்ள மனித ஜாதிக்கு இரண்டும் உண்டு. முன்னனியில் உள்ள நம்முடைய இசை அமைப்பாளர்களுக்கு நாட்டுபுறப்பாட்டுகள் மூலக்கருத்தை கொடுக்கின்றன. காலம் சென்ற தியோடர் எஃப். சேவார்டு (Theodore F. Seward) என்பவர் தான் பிரதி எடுத்த நீக்ரோ மக்களின் தோப்புகளில் பாடப்படுகிற பாடல்களைக் குறித்துச் சொல்லும்போது, அவைகளின் இசைவும் முன்னேற்றமும் சங்கீதம் இயற்றப்படுவதற்கு, விஞ்ஞான விதிமுறைகளை கடைப்பிடிப்பனவாக இருந்தன என்றார். முற்றுமாக முன்னேற்றமடைந்த மனிதனுக்கு சங்கீதத்தை கிரகிக்கும் தன்மை பிரயோஜனமுள்ளதாக இருந்த போதிலும், மனித குரங்கு போன்ற மிருகங்களுக்கு அது பிரயோஜனமாக இருந்திருக்கும் என்று நாம் நினைத்துப்பார்க்க முடியாது. மனிதன் அல்லது மனுஷிக்கு கவனத்தை ஈர்க்கக்கூடிய சங்கீதக்குரல், சிறிதளவே மனித குரங்கை ஈர்க்கிறது.

''மனிதனுக்கு கீழாக உள்ள உயர்ந்த மிருக சிருஷ்டிக்கு தேவைப்படும் மூளையை பார்க்கும் போது, மனிதனின் மூளை அளவு எல்லாவிதத்திலும் மேம்பட்டது, அதுவும் மனித உதவியின்றி அது அதற்கு பிரயோஜனமற்றதாகத் தோன்றும். ஆகவே, இந்த இரண்டும் ஒரே நேரத்தில் தோன்றியிருக்க வேண்டும், அது தானாகவே வந்தது என்று பற்றிக்கொண்டு பாதுகாத்து, அபிவிருத்தி பண்ணுவதற்கு அனுகூலமானதாக இருந்திருக்க வேண்டும்....



''மனித குரங்கின் பின்புறமுள்ள அங்கத்தின் பெருவிரல் பெரிய கால் விரலாக மாறி, இனியும் பொருட்களை பிடிக்க பிரயோஜனப்படாமல் நிமிர்ந்து நடக்க மாத்திரமே உபயோகப்படுவதற்கு அநுகூலமாக இருந்திருக்கும் என்பதை பார்க்க கடினமாக உள்ளது. ஒரு மனித குரங்கின் முன்னங்கால்கள் குறுகலாக்கப்பட்டு ஒரு மனிதனின் புஜங்களைப்போல் மாற்றப்படுமானால் அதற்கு என்ன அனுகூலம் வருமென்பதைப் பார்க்க கடினமாக உள்ளது. இடுப்பு எலும்பு, கழுத்து எலும்புக்கு வரும் மாற்றங்களினால் மனித குரங்குக்கு வரும் அனுபவங்கள் எப்படி அனுகூலமாக இருந்திருக்க முடியும் என்பதைக் காணவும் கடினமாக உள்ளது. நான்கையும் உபயோகித்து நடப்பதை தடைபண்ணும், மாத்திரமல்ல நிமிர்ந்து இரண்டு கால்களால் மாத்திரம் நடப்பதற்கு உதவும்.

''இவைகளெல்லாம் படிப்படியாகத்தான் நடந்தன என்றும், புலப்படாத அல்லது கிட்டதட்ட புலப்படாத அளவிற்கு மனுக்குலம் பூரணப்படுவதற்கு மேலே சொல்லப்பட்ட மாற்றங்கள் வழி உண்டாக்கின என்றும் சொல்லி நாம் வற்புறுத்தப்பட்டால் மனிதனின் ஆரம்பம் தன்னாலேயே உண்டாயிற்று என்ற நிலையைக் குறித்த நம்முடைய புரிந்துகொள்ளும் தன்மைக்கு மிகவும் கடினமான நிலை அதிகரித்து வருகிறது. இந்த ஆரம்ப நிலையில் உள்ள மாற்றங்கள் பிரயோஜன மற்றவைகள் என்று சொல்லும் நம்முடைய நிலைமையை இன்னும் கஷ்டத்துக்குள்ளாக்குகிறது. பிரயோஜனமுள்ளதாக இருப்பதற்கு அவைகள் நிறைய இருந்திருக்கவேண்டும். சரீரப்பிரகாரமான, மனரீதியான மாற்றங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்ட ஒத்துப்போகிற சட்டங்களோடு சம்பந்தப்பட்டிருக்க வேண்டும்.

''மனிதனின் தோற்றத்தைக் குறித்த மர்மம் டார்வினின் உத்தேசங்களாலோ, பரிணாமக் கொள்கைகளின் வெளிச்சத்தினாலாவது எந்த விதத்திலும் குறைந்து போகவில்லை. பூமியில் ஜனத்தொகைக்கு சேர்க்கப்பட்ட இனங்களில் மனிதன் மிக சமீபமானவன், மனம் சம்பந்தப்பட்டதில், அவன் கீழ்மட்டத்திலுள்ள மிருகங்களுக்கு மேல் உயர்ந்து இருப்பவன். மற்ற காரணத்திற்காக இல்லாவிட்டாலும் அந்த காரணத்திற்காக, தனித்து நிற்பவன் என்று பூமி அமைப்பியல் சாஸ்திரப்படி எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்படுபவன். ஒரு சரீர அமைப்போடும், உடற்கூறு கட்டமைப்போடும் அதன் செயல்முறைக்கு ஏற்ற வண்ணமாக இருக்கும்போது மனிதன் இவ்வளவு அதிக மன வளர்ச்சியை எப்படி உடையவனான் என்பதுதான் மர்மமாக உள்ளது. இம்முறைமையில் உள்ள அறிவுள்ள ஜீவிகளிலிருந்து ஊதப்பட்டவை களினால் வந்தன என்று சொல்பவர்கள், வேதாகமம் எளிமையான முறையில் சொல்லுகிறபடி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்,–தேவசாயல் என்பதை ஏற்றுக்கொள்பவர்களைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமாக (மனோ) தத்துவ கஷ்டங்களை சந்திப்பார்கள்.''

*''ஆழம் அறியப்படாத சுரங்கங்களில்*
*திறமை தவறாதிருக்க,*
*அவர் அவருடைய பிரகாசமான திட்டங்களைப்*
*பொக்கிஷமாக வைக்கிறார்,*
*அவருடைய சர்வ சித்தத்தை நிறை வேற்றுகிறார்.*

*''அவருடைய நோக்கங்கள் சீக்கிரம் நிறைவேறும்,*
*ஒவ்வொரு மணி நேரமும் விளங்குகிறது.*
*கசப்பாக இருக்கலாம் மொட்டு,*
*ஆனால் இனிப்பாக இருக்கும் பூ.*

*''குருடான அவநம்பிக்கை நிச்சயம் தவறும்,*
*அவருடைய கிரியையை அலசுவது வீண்.*
*தேவன் தானே தனது திட்டத்திற்கு அர்த்தம் கூறுகிறவராயிருந்து*
*அவர் அதை வெளியரங்கமாக்குவார்.''*